உ

சிவமயம்

சைவ சித்தாந்த நோக்கில்

அத்வைதம் - தத்துவமஸி

ஒரு விளக்கம்

ஆசிரியர்

சித்தாந்த பண்டித பூஷணம்

முனைவர் ர.வையாபுரி எம்.ஏ., பிஎச்.டி.,

வெளியீடு : சைவ சித்தாந்த சபை

ஈரோடு

உ

சிவமயம்

சைவ சித்தாந்த நோக்கில்

அத்வைதம் - தத்துவமஸி

ஒரு விளக்கம்

ஆசிரியர்

முனைவர் ர.வையாபுரி. எம்.ஏ., பிஎச்.டி.,

வெளியீடு

சைவ சித்தாந்த சபை

ஈரோடு

நூல் குறிப்பு

நூலின் பெயர்	: அத்வைதம் - தத்துவமசி
நூலாசிரியர்	: முனைவர் ர. வையாபுரி எம்.ஏ.,பி.எச்டி.,
நூல் வகை	: கட்டுரைத் தொகுப்பு
நூல் உரிமை	: சைவ சித்தாந்த சபை, ஈரோடு .
பதிப்பு ஆண்டு	: முதற்பதிப்பு - டிசம்பர் 2018
நூல் அளவு	: 20.5 14. செ.மீ.
பக்கங்கள்	: 80 பக்கங்கள்
எழுத்து	: ஸ்ரீ 12 புள்ளிகள்.
தாள்	: 21.3 கேஜ் (வெஸ்கோஸ்)
படிகள்	: 1000
வெளியீடு	: சைவசித்தாந்த சபை, 9-பி, முத்துசாமி சந்து, இரண்டாவது தளம், கைக்கோளன் தோட்டம், ஈரோடு - 638 001. அலைபேசி : 94432 51731
வெளியீடு எண்	: 22
விலை	: 40/= ரூபாய்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தோற்றம் 13.07.1932 திருவடிப் பேறு 29.11.2015



நடுக்கண் மறைத்து நல்லாற்றூர் பிறந்து
இடுக்கண் பல கடந்து இன்பம் தரும் இனிய
சைவ சித்தாந்தம் ஒருவடிவு கொண்டு
உயிரின் பந்தம் நீங்க மும்மலம் அறுத்து
எமை ஆளும் வையாபுரிக் கோவே போற்றி! போற்றி!!

உ
சிவமயம்

கற்றோர் போற்றும் கற்பகமே

நல்லாற் றூரில் பிறந்தாங்கே
நற்சிவ ஞான பாலையரால்
நன்னூல் பலவும் கேட்டுவந்தார்
நந்தமிழ் மொழியில் மிகஉயர்ந்தார்;

பல்லாற் றானும் பைந்தமிழைப்
பலரும் பெறவே பேரூராம்
பிறவா நெறிக்கு அடிகள்பிரான்
பரிந்தே அழைக்க வந்தணைந்தார்

சொல்லாற் றலினால் கற்பவரின்
சிந்தை கவர்ந்தார் அவரெல்லாம்
சீரார்ஆசி ரியர்ஐயா
என்றே அழைக்கும் சீர்பெற்றார்

கல்லால் நீழல் அமர்ந்தசிவம்
கழலே அன்றிக் கருதாதார்
கற்றோர் போற்றும் கற்பகமே
வையா புரியாம் நற்பதமே!

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
24 ஆவது குரு மகாசன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருவாவடுதுறை - 609 803. நாகை மாவட்டம்

நாள் : 19.12.2018

அருள் வாழ்த்துரை

பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும்போல் எங்குமாம் - அண்ணல்தாள்
அத்துவித மாதல் அருமறைகள் ஒன்றென்னா(து)
அத்துவிதம் என்றறையும் ஆங்கு

- சிவஞானபோதம்

அத்வைதம் - தத்துவமஸி என்ற பொருள் குறித்துச் சித்தாந்த பண்டித பூஷணம் முனைவர் ர.வையாபுரி அவர்கள் எழுதியுள்ள கட்டுரைத் தொகுப்பினை ஈரோடு சைவ சித்தாந்த சபை 30.12.2018 அன்று நூலாக வெளியிட உள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

''அத்வைதம்'' என்ற சொல்லும், ''தத்துவமஸி'' என்ற சொல்லும் இறை - உயிர் தொடர்பு குறித்து விளக்கும் சொற்களாகும். எனவே இச்சொற்களுக்குப் பொருள் காண்பது

மிகவும் அவசியமாகின்றது. இச்சொற்கள் வேத உபநிடதங்களில் இடம் பெற்றுள்ளவை. ஆகையால் வேதங்களைப் பிரமாணமாக ஏற்கும் பல சமயத்தவரும் இச்சொற்களுக்குப் பொருள் விளக்கம் தருவர்.

அம்முறையில் சைவ சித்தாந்த நூல்கள் இச்சொற்களுக்குத் தரும் பொருள் விளக்கத்தினை ஒப்பீட்டு முறையில் அறிந்து தெளிவு பெற வேண்டியது இன்றியமையாத பணியாகும்

இவ்வாறு தெளிவுபெற விழைவோருக்கு இந்நூல் பெருந்துணையாக இருக்கும் பேராசிரியர் முனைவர் ர.வையாபுரி அவர்கள் தெளிவான விளக்கங்களைச் சைவ சித்தாந்த மரபு வழித் தந்துள்ளார். பிற சமயங்கள் தரும் விளக்கங்களையும் உள்ளவாறு காட்டியுள்ளார்.

நூல் வெளியீடு சிறப்பாக நடைபெறவும், ஈரோடு - சைவ சித்தாந்த சபையின் சைவ நற்பணிகள் மேன்மேலும் தழைக்கவும் வேண்டி நமது ஆன்மார்த்த மூர்த்திகளாகிய ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்

பெறுநர்

சைவத்திரு. பெ.வெங்கடாசலம் அவர்கள்
அமைப்பாளர்
சைவசித்தாந்த சபை
ஈரோடு.

உ

சிவமயம்

பதிப்புரை

அருள்தரு வாரணாம்பிகை உடனமர் அருள்மிகு **திருத்தொண்டீஸ்வரர்** பெருமான் திருவருளாலும் திருக்கயிலாயப் பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானங்களின் குருவருளாலும் கோவை பேராசிரியர் முனைவர் ர.வையாபுரி ஐயா அவர்கள் வழிகாட்டிவந்ததின்படி ஈரோடு சைவ சித்தாந்த சபை தனது சைவப்பணியை மேற்கொண்டு வருகிறது. அத்வைதம் - தத்துவமஸி என்னும் இக்கட்டுரை நூல் ஐயாவின் நினைவினைப் போற்றும் வகையில் வெளியிடுகிறோம்.

2006 ஆம் ஆண்டு திருநெறிய தமிழ் மன்றத்தினரால் வெளியிடப்பட்ட **"அத்துவிதம் - மெய்கண்டார் தரும் விளக்கம்"** எனும் நூல் அத்வைதம் - தத்துவமஸி என்னும் இந்நூலில் ஒரு கட்டுரையாக இடம்பெற்றுள்ளது. இக்கட்டுரையில் **"கச்சியப்ப முனிவரின் சைவ சித்தாந்தம் - முத்திநிலை ஆய்வில்"** இடம் பெற்றிருக்கிற **"அத்துவிதம்"** என்ற கட்டுரையின் கருத்துக்களும் இணைத்துத் தொகுக்கப்பெற்றுள்ளது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள **"தத்துவமஸி"** என்னும் கட்டுரை **"கச்சியப்ப முனிவரின் சைவ சித்தாந்தம் - முத்திநிலை ஆய்வு"** என்னும் நூலில் இடம் பெற்றிருந்த **"தத்துவமஸி"** என்னும் தலைப்பிலுள்ள கட்டுரையாகும். இக்கட்டுரையில் 2005 ஆம் ஆண்டு சித்தம் அழகியார் வழிபாட்டுக் குழுவின் வெளியிட்ட **"ஞானமா? செல்வமா?"** என்ற நூலின் **ஞான போதகம்** என்ற தலைப்பிலான கட்டுரையின் சிற்சில பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளள.

அத்வைதம் தத்துவமஸி குறித்து விரிவாக, சித்தாந்த சைவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்னும் நோக்கில் இத்தொகுப்பு வெளியிடப்படுகின்றது.

இந்நூலிற்கு ஆசியுரை வழங்கி அருளிய **திருவாவடுதுறை ஆதீனம் 24ஆவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்குச்** சபையின் சார்பில் நன்றி கலந்த வணக்கத்தைத் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றோம்.

இந்நூலுக்குப் பிழை திருத்தம் செய்து தந்த திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய ஈரோடு பேராசிரியரும் ஐயா அவர்களின் மாணவருமான **புலவர் கு.சோ. முருகன் ஐயா** அவர்களுக்கு மகிழ்ச்சி கலந்த நன்றியை இச்சபை தெரிவித்துக் கொள்கிறது.

நூலை நல்லமுறையில் தட்டச்சு செய்து கொடுத்த **முனைவர் ச.கோகுல் கிருஷ்ணன்** அவர்களுக்கு நன்றியினை இச்சபை தெரிவித்துக் கொள்கிறது.

இச்சபை நன்கு நடைபெறுவதற்குச் சான்றோர் பலர் அவரவர்களுக்கு இயன்றவகையில் உதவி செய்து ஊக்கம் அளிக்கின்றனர். அவர்களுக்கும் இச்சபை தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்நூல் வெளிவர உதவிய சபை அன்பர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு திருவருளையும் குருவருளையும் மனம் மொழி மெய்களால் வணங்கி இப்பதிப்புரையை நிறைவு செய்கின்றேன்.

இங்ஙனம்
பெ.வெங்கடாசலம்
அமைப்பாளர்
சைவசித்தாந்த சபை
9.பி முத்துசாமி சந்து,
கைக்கோளன் தோட்டம்,
ஈரோடு - 638 001

உ
சிவமயம்

அத்துவிதம் - வேறின்மை
மெய்கண்டார் தரும் விளக்கம்

மெய்கண்டார் துதி

கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும் - வெண்ணெய் நல்லூர்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்திற் கண் - அருள் நந்தி சிவம்

நமது பாரத நாட்டில் சமயங்கள் பல உள்ளன. பாரத நாட்டில் தோன்றியன பல; வெளிநாட்டில் தோன்றிப் பாரத நாட்டில் புகுந்தன சில; பாரத நாட்டில் தோன்றியனவும் வெளிநாட்டில் பரவின.

பாரத நாட்டில் தோன்றிய சமயங்களை வைதிகம், அவைதிகம் என இரு பிரிவாகப் பிரிக்கலாம். வைதிக சமயங்களையும், கடவுள் உண்மையை உடம்படுவன, அதனை உடம்படாதன என இருவகையாகப் பிரிக்கலாம்.

கடவுள் உண்மையை உடம்படும் சமயங்களையும், பிரமம், விஷ்ணு அல்லது சிவம் என்னும் ஒரு பொருள் மட்டுமே உண்டு எனக்கூறும் சமயம்; பிரமம், சிவம் அல்லது விஷ்ணு என்னும் ஒரு பொருள் உண்டு, இதனுடன் உயிர்கள் உள்ளன, உலகமும் உள்ளது எனப் பல பொருள்கள் உண்டு எனக்கூறும் சமயங்கள் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

இவ்விருவகைப் பிரிவுகளும் வேதத்தின் அந்தமாகிய உபநிடதங்களையே பிரமாணமாகக் கொள்கின்றன. உபநிடதங்களில் ஏகம் எனவும் அத்துவிதம் எனவும் ஏகம்

அத்துவிதம் எனவும் தத்துவமசி எனவும் சில சொற்கள், தொடர்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏகோவை ருத்ர நத்விதீயத் அஸ்து

ஏகம் ஏவ அத்விதீயம் பிரம்மம்

தத்துவமசி

இவற்றுக்குப் பொருள் காண்பதில் தான் கடவுள் உண்மையை உடம்படும் சமயங்களிடையே வேறுபாடு காணப்படுகிறது. இவற்றுக்குள்ளும் குறிப்பாக **அத்துவிதம்** என்பதற்குப் பொருள் காண்பதில்தான் வேறுபாடு மிகவும் காணப்படுகின்றது. இதில் காணப்படும் வேறுபாடே மற்றவற்றின் பொருளைப் பாதிக்கின்றது.

அத்துவிதம் என்பதற்குப் பொருள் காண்பதில் ஏற்பட்ட வேறுபாடு காரணமாகவே தத்துவ ஞானத்தில் கேவல அத்வைதம், விசிஷ்ட அத்வைதம், துவைதம் என்று மூன்று வகையான கோட்பாடுகள் உருவாயின. கேவல அத்வைதம் சொன்னவர் **சங்கரர்**. விசிஷ்ட அத்வைதம் சொன்னவர் **ராமானுஜர்**. துவைதம் சொன்னர் **மத்துவர்**. இம்மூவரும் பாரத நாட்டின் தென்பகுதியினர். இம்மூவரும் தத்துவஞான உலகில் நன்கு அறியப்பட்டவர்கள். வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் மிகப்பலர் இவர்களைப்பற்றியே - குறிப்பாக சங்கரரைப் பற்றியே அறிந்துள்ளனர். இம்மூவரும் உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை என்னும் மூன்றையும் சிறந்த பிரமாண நூல்களாகக் கொண்டவர்கள். இராமானுஜர் வைணவ திவ்யபிரபந்தங்களையும் உடன் கொண்டவர்.

இம்மூவரேயன்றிச் சுத்த அத்வைதம் என்றோர் அத்வைதம் சொன்னவர் ஒருவர் உளர். அவர் பெயர் **மெய்கண்டார்** என்பது. இவரும் பாரத நாட்டின் தென்பகுதியினர்.

தத்துவ ஞான உலகில் இம்மெய்கண்டாரை மிகப்பலர் அறிந்துள்ளனர் என்று சொல்வதற்கில்லை. வெளி நாட்டிலிருந்து வந்தவர்களிலும் மிகப்பலர் அறிந்துள்ளனர் என்று சொல்வதற்கில்லை. எனினும் இவர் சொன்ன அத்வைதமே உண்மையான அத்வைதம்.

தமிழ்நாட்டில் இவருக்கு ஒரு மரபு உண்டு. இருவரும் இவர் மரபினரும், உபநிடதங்களைப் பொதுவாகவும், சிவாகமங்களையும், தமிழ்த் திருமுறைகளையும் திருக்குறளையும் சிறப்பாகவும் பிரமாண நூல்களாகக் கொண்டனர். இம்மரபினாரின் கொள்கை **சித்தாந்த சைவம்** எனப்படும். இது சிறப்பாகத் தமிழகத்துக்கு உரிமை உடையது.

இவர் சொன்ன சுத்த அத்வைதமே உண்மையான அத்வைதம் என்பதும் மற்றையோர் கூறியன உண்மையானவை அல்ல என்பதும் மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்துக்கு மாதவச் சிவஞான முனிவர் அருளிய சிவஞான மாபாடியம் (மகாபாஷ்யம்) என்னும் உரையில் நன்கு விளக்கி எழுதப்பட்டுள்ளது. அதனைச் சிறிது எடுத்துக்காட்டுவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

முன்னதாக அத்வைதம் என்ற சொல் நிலையினையும், அதன் பொருளையும் விளங்கிக் கொண்டால்தான் யார் சொன்னது உண்மையான அத்வைதம் என்பதைப் புரிந்து கொள்ளுதல் இயலும்.

அத்வைதம் - சொல்நிலை

அத்வைதம் என்பது வடமொழிச் சொல். "த்வைதம்" என்ற சொல்லின்முன் "ந" சேர்ந்து "அத்வைதம்" என அமைந்தது. "துவி" - இரண்டு என்னும் எண்ணிக்கையைக் குறிக்கும். எண்ணிக்கையைக் குறிப்பது என்பதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இது "துவைதம்" என வரும்பொழுது

இரண்டு என்னும் தன்மை என்னும் பொருளை உணர்த்தும். இதன் முன்னர் இணைந்த ''ந'' என்பதுதன், பின் உள்ள சொல்லின் பொருளை எதிர்மறுத்துவரும். தமிழில் எதிர்மறை என்பர். வடமொழியில் ''நஞ்'' என்பர்.

எதிர்மறையினை உணர்த்தும் ''ந'' என்பது வருமொழியின் முதலில் உயிரெழுத்து வந்தால் முன்பின்னாக (ந்+அ என நிற்பது அ+ந் என) மாறி நிற்கும். வருமொழி முதலில் மெய்யெழுத்து வந்தால் ''ந'' என்பதில் (ந்+அ) ''ந்'' கெட்டு ''அ'' மட்டும் நிற்கும் என்பது வடமொழி இலக்கண விதி என்பது. இங்கு ''ந+துவிதம்'' என்பதில் வருமொழியில் ''த்'' என்னும் மெய்யெழுத்து வந்துள்ளதால் ''ந'' என்பதில் ''ந்'' கெட்டு ''அ'' மட்டும் நின்று **துவிதம்** என்பதனுடன் கூடி **அத்துவிதம்** என வந்தது.

அத்வைதம் - பொருள்நிலை

இனி, இதன் பொருள்நிலையைப் பார்த்தல் வேண்டும். 'த்வி' 'த்விதம்', 'த்வைதம்' என்பனவற்றின் பொருள் நிலையில் சிக்கல் இல்லை. ''ந'' என்னும் எதிர்மறைக்குப் பொருள் கொள்வதில் தான் சிக்கல் இருக்கின்றது.

வடமொழி இலக்கண நூலார் ''ந'' என்னும் எதிர்மறைக்கும் ஆறுவகையாகப் பொருள் கூறுகின்றார். அவை வருமாறு:

1. **தத்சாதிருசியம்** – இதன் பொருள் – **அதற்கு ஒப்பான பொருள்** என்பது. உதாரணம் ''**அநஸ்வம்**'' என்பது. அஸ்வம் - குதிரை. இது ந அஸ்வம் - ந முன்பின்னாக மாறி நின்று அநஸ்வம் எனவந்தது. இதில் வந்த ''ந'' என்னும் எதிர்மறை அஸ்வம் என்பதன் பொருளை மறுத்து அஸ்வத்திற்கு ஒப்பான

பிரிதொரு பொருள் – "கோவேறுகழுதை" – என்பதை உணர்த்தியது. அப்பிராமணன் என்பதையும் காட்டுவர். ந பிராமணன் அப்பிராமணன். பிராணமத்தன்மை இல்லாது இருந்தும் பிராமணன் போல் யக்ஞோபவீதம் முதலியன தரித்துள்ளவன் என்பது பொருள்.

2.**தத்அபாவம்** – இதன்பொருள் – **அதன் இன்மை** என்பது. உதாரணம் **அமலம்** - ந மலம். இதில் "ந்" கெட்டு "அ" மட்டும் நின்று அமலம் என வந்தது. மலம் என்பதன் பொருளை மறுத்து மலம் இன்மையினை இது உணர்த்தியது. அசிருங்கன் மனிதன் என்பதையும் காட்டுவர். **சிருங்கம் – கொம்பு. ந சிருங்கண் – அசிருங்கண். கொம்பில்லாதவன் – மனிதன் என்பது பொருள்.**

3.**தத்அந்யத்துவம்** – இதன் பொருள் – **அதற்கு வேறானது** என்பது. உதாரணம் **அநாகஸ பூ: ந + ஆகாஸ** என்பது **அநாகாஸ** என வந்தது. **பூ – பூமி.** இதில் **ஆகாஸம்** என்னும் பொருளை மறுத்து **ஆகாஸத்தின்** வேறான **பூமி** என்னும் பொருளை உணர்த்தியது.

குறிப்பு: தத்சாதிருசியமும், வேறான பொருளைத்தான் உணர்த்துகிறது. தத்அந்யத்துவம் என்பதும் வேறான பொருளைத்தான் உணர்த்துகிறது. என்றாலும் முன்னது ஒப்புமையுடைய பொருளை மட்டும் உணர்த்துகிறது. பின்னது எவ்வகையிலும் ஒப்புமையில்லாத பொருளையும் உணர்த்துகிறது. இந்த வேற்றுமையைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பின்னர் ஆறாவதாகக் கூற உள்ள தத்விரோதம் என்பதும் வேறான பிறிதொரு பொருளைத்தான் உணர்த்துகின்றது. எனினும் அது ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையான பொருளை உணர்த்துகின்றது என்பதையும் இங்குக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

4.தத்அல்பதா – இதன்பொருள் – அது குறைவு என்பது. உதாரணம் அநுதராகன்யா என்பது. ந உதரா என்பது அந்உதரா என வந்தது. உதரம் – வயிறு. கன்யா – கன்னிப்பெண். இங்கு 'ந' என்னும் எதிர்மறை வயிறு என்னும் பொருளை இல்லை என மறுத்தோ – வயிற்றுக்கு ஒப்பான வேறொரு பொருள் உண்டு என உணர்த்தியோ ஒப்புமை சிறிதும் இல்லாத வேறொரு பொருள் உண்டு என உணர்த்தியோ வரவில்லை. சிறிய வயிறு உடையவள் என்னும் பொருளை உணர்த்தி வந்தது. அதாவது தன்னோடு இணைந்து வரும் சொல் உணர்த்தும் பொருளின் தன்மையை - சிறிது / பெரிது உணர்த்தி வந்தது.

5.தத்அப்ராசஸ்த்யம் – இதன் பொருள் – அது மிகுதியாக இல்லை என்பது. பிராசஸ்யம் – மிகுதி: ந + பிராசஸ்த்யம், அப்ராசஸ்த்யம் – மிகுதியாக இல்லை எனப் பொருளாயிற்று. உதாரணமாக அமரர் தேவர். ம்ருத் என்பதற்கு மரணம் என்பது பொருள். ம்ருத் முன் எதிர்மறையான ந சேரும்போது (ந+மிருத்) "ந்" கெட்டு "அ" மட்டும் நின்று வரும் சொல்லுடன் சேர்ந்து அம்ருத் –அமரர் என வந்தது. அமரர், தேவர் என்பதன் பொருள் தேவர்கள் மரணமில்லாதவர்கள் என்பது. தேவர்களுக்கும் மரணம் உண்டு. ஆனால் மனிதர்களுக்கு உள்ளது போல் குறுகிய கால அளவில் மரணம் நிகழ்வதில்லை. மிகநீண்ட காலம் கழித்து நிகழ்வது என்ற கருத்தில்தான் அமரர்கள் என்ற சொல் மரணமில்லாதவர்கள் என்ற பொருளில் வழங்கிவருகின்றது. இந்திரன், பிரம்மா,

விஷ்ணு முதலியவர்களும் மரணத்துக்கு உட்பட்டவர்களே.*

௬.**தத்விரோதம்,** இதன்பொருள் – **அதன் மறுதலை** என்பது. மறுதலை – நேர் எதிரிடையானது. உதாரணம் – **அதர்மம். ந தர்மம்** என்பதில் "**ந்**" கெட்டு "**அ**" மட்டும் நின்று **அதர்மம்** என வந்தது. இதில் "**ந**" **என்பது தன்னுடன் இணைந்து வந்த சொல்லின் பொருளை மறுத்து இல்லை என்றோ, ஒப்பான பொருள் வேறொன்று உண்டு என்றோ இயைபேயில்லாத பொருள் வேறொன்று உண்டு என்றோ உணர்த்தி வரவில்லை. அதர்மம் என்பது தர்மத்திற்கு எதிரிடையான பாவமும் (தர்மமும்) உண்டு என்னும் கருத்தை உணர்த்தி வந்தது.**

இதுவரை கூறியது அத்துவிதம் என்பதில் உள்ள "ந - அ" என்னும் எதிர்மறையின் பொருள்நிலை.

★ குறிப்பு: இதுவும் நான்காவதாக உள்ள தத்அல்பதா என்பதும் இல்லை என்ற பொருளிலோ, வேறொன்று என்று பொருளிலோ? வரவில்லை. பொருளின் தன்மையை மட்டுமே மறுத்தன என்பதைக் கருத்தில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஆறுபொருளும் மூன்று பொருளாய் அடங்கும்

இங்ஙனம் வடமொழி இலக்கணம் விரிவாக ஆறுபொருள் சொன்னாலும் இவற்றை மூன்று பொருளாக அடக்கிக் கூறலாம். அம்மூன்று பொருள்களாவன:

1. அன்மைப் பொருள்
2. இன்மைப்பொருள்
3. மறுதலைப்பொருள்

என்பன. மூன்றாய் அடங்கும் முறை வருமாறு:

மேலே கூறிய ஆறு பொருள்களில் தத்அல்பதா என்பதும் தத் அப்ராசஸ்த்யம் என்பதும் பொருள் உண்டு என்பதை மறுக்கவில்லை. பொருளின் தன்மையினையே பெரிதாக அல்லது: சிறிதாக உள்ளது என்றோ, குறுகிய காலத்தில் அல்லது: நீண்ட காலத்தில் உள்ளது என்றோ கூறுவதனால் அவை யிரண்டும் எதிர்மறைப்பொருளுக்குச் சிறந்தன அல்ல எனத் தள்ளிவிடலாம்.

மற்றநான்கு பொருள்களில் தத்சாதிருசியம் என்பதும் தத்அந்யத்வம் என்பதும் குறிப்பிட்ட பொருளுக்கு வேறான பொருள் (ஒப்பான பொருள் அல்லது ஒப்பில்லாத பொருள்) உண்டு என உணர்த்துவதனால் இரண்டையும் ஒன்றாக அடக்கிவிடலாம். இவ்விரண்டும் அன்னியமான பொருள் உண்டு என உணர்த்தும். இதனை அன்மைப் பொருள் எனக் கொள்ளலாம். ஒப்பான பொருள் உண்டு என உணர்த்துவதே அன்மைப் பொருளுக்குச் சிறந்தது எனல் வேண்டும். ஒப்புமையில்லாத பொருளும் தள்ளத்தக்கதன்று. அன்மைப் பொருளைச் சிலர் தத்சததிசியம் என்கின்றனர். சிலர் தத்சாதிருசியம் என்கின்றனர்.

மற்ற இரண்டு பொருள்களாகிய தத்அபாவம் என்பதனையும் தத்விரோதம் என்பதனையும் தனித்தனியே ஏற்றுக் கொள்ளலாம். தத்அபாவம் இன்மைப்பொருள் எனப்படும். தத்விரோதம் மறுதலைப்பொருள் எனப்படும்.

இங்ஙனம் கொள்வதனால் ஆறு பொருள்களுள் இன்மை, அன்மை, மறுதலை என்ற மூன்று பொருள்களே ''ந'' என்னும் எதிர்மறைக்குப் பொருள் என்பது முடிவாகின்றது. இம்மூன்றையும் சற்று விளக்கமாக இனிப் பார்க்கலாம்.

1. இன்மைப் பொருள் :

சில இடங்களில் வருமொழிப் பொருளின் இல்லாமையை உணர்த்தும். உதாரணம் ந+அங்கன் = அநங்கன். அங்கன் - உடம்புடையவன். இதனுடன் எதிர்மறை ந சேர்ந்து (அநங்கன்) உடம்பு இன்மையை உணர்த்தி உடம்பு இல்லாதவன் என்னும் பொருளில் மன்மதனுக்குப் பெயராய் வந்தது. மன்மதனுடைய உடம்பு இறைவனால் எரிக்கப்பட்டது என்பதும் பின் அவனுடைய மனைவியாகிய இரதி என்பவளுக்கு மட்டும் அவ்வுடம்புடன் தெரிவான் என்றும் மற்றவர்களின் கண்ணுக்கு அவ்வுடம்புடன் தெரியமாட்டான் என்றும் இறைவன் அருளினான் என்பதும் அனைவரும் அறிந்ததே. இங்ஙனம் பொருள் உணர்த்துவதனை இன்மைப் பொருளில் வந்த எதிர்மறை என்பர். மலன் - மலத்தோடு கூடியவன். ந+மலன் = மலம் இல்லாதவன். ந என்பதில் ந் கெட்டு அ மட்டும் நின்று வருமொழியுடன் சேர்ந்து அமலன் எனவந்தது. இது இன்மைப் பொருள்.

2. மறுதலைப் பொருள் :

சில இடங்களில் வருமொழிப் பொருளுக்கு நேர் எதிரிடையான - முரணான - பொருளை உணர்த்தும். உதாரணம் : அதர்மம். தர்மம் - புண்ணியச் செயல். ந+ தர்மம் = அதர்மம் . புண்ணியச் செயலுக்கு

எதிர்மறையான பாவச் செயல் என்னும் பொருளை உணர்த்தி வந்தது. இங்குத் தர்மம் இல்லை என இன்மைப் பொருளை மட்டும் உணர்த்தி வரவில்லை. பாலமும் உண்டு என்னும் பொருளையும் உணர்த்தி வந்துள்ளது. "ந" என்பதில் "ந்" கெட்டு "அ" மட்டும் நின்று வரு மொழியுடன் புணர்ந்து அதர்மம் என வந்தது. இங்ஙனம் பொருளுணர்ந்துவதனை மறுதலைப் பொருளில் வந்தது என்பர்.

3. அன்மைப் பொருள் :

சில இடங்களில் வருமொழிப் பொருளை, இல்லை என்று உணர்த்தாமலும் வருமொழிப் பொருளுக்கு முரணான பொருளே உள்ளது என்று உணர்த்தாமலும் வருமொழிப் பொருளுக்குச் சமமான வேறொரு பொருள் உண்டு என்னும் பொருளை உணர்த்தி வரும். உதாரணம் : அநசுவம் - அசுவம் போல் உள்ள கோவேறு கழுதை. அசுவம் - குதிரை. வருமொழி அசுவம் என்பதில் முதலெழுத்து "அ" என்னும் உயிரெழுத்தாய் இருப்பதனால் "ந" என்பது முன்பின்னாக "அ" "ந்" என மாறி நின்று அசுவம் என்பதனுடன் சேர்ந்து அநசுவம் என வந்தது. இதனை அன்மைப் பொருள் என்பர். தத்சாதிருசியம் என்று வடமொழியில் கூறுவர். தத்சாதிருசியம் - அதற்கு ஒப்பானது.

இங்கு "ந" என்னும் எதிர்மறை குதிரை இல்லை என்ற பொருளிலும் வரவில்லை. குதிரை என்னும் விலங்குக்கு நேர் முரணான பறவையோ மனிதனோ - உண்டு என்ற பொருளிலும் வரவில்லை. இங்கு "ந" என்னும் எதிர்மறை, உருவத்தால் குதிரை போன்றதும் குதிரை போல் ஏறிச் செல்லுவதற்கும் பிறவற்றுக்கும் பயன்படுவதுமாகிய கோவேறு கழுதை உண்டு என்னும் பொருளில் வந்தது. பழைய காலத்தில் பெருஞ் செல்வர்கள் கோவேறு கழுதையை வாகனமாகப் பயன்படுத்தினர் என்பது - வானவண்கையன் அத்திரி ஏற என்னும் சிலப்பதிகாரத்தால் (கடலாடு காதை 119 - 120) தெரிகிறது. அத்திரி - கோவேறு கழுதை

வடமொழி இலக்கண மரபையும் மனத்தில் கொண்டு பிற்காலத்தில் தமிழுக்கு இலக்கணம் செய்தவர்கள் இம்மூன்று பொருள்களையே எதிர்மறைக்குக் கூறினர்.

தமிழ் இலக்கண நூலார் கூறுவன

அ, அந், ந, நி, கு, வி, வரும் மொழிப்பொருளை இன்மை, பிறிது, மறையினுள் ஒன்றாக்கும் - என்பது இலக்கண விளக்கம் (ஒழிபியல், சூ. 14)

"ந ஞ்" னுச் சொற்பொருள்
அன்மை, மறை, இன்மை காட்டும் - என்பது பிரயோக விவேகம் (சமாசபடலம் - செய்.4)

தத்அபாவம், தத்அந்நியம், தத்விருத்தம் என மூன்றாகும். நஞ்ஞு தற்புருடன் - என்பது மேலே கூறிய பிரயோக விவேகச் செய்யுளில் காட்டிய உரைச் சூத்திரம்.

வடமொழி இலக்கணமும் தமிழுக்குப் பயன்படுவதே

இவர்கள் வடமொழி இலக்கண மரபைத் தமிழுக்குக் கூறினதும் ஓர் உபகாரம் பற்றியோயாகும். தமிழில் தோத்திர நூல்களும், சாத்திர நூல்களும் மிகுதியாக வடமொழிச் சொற்களைத் தமிழுக்கு ஏற்பத் திரித்தோ அல்லது வடமொழியில் உள்ள படியாகவோ பயன்படுத்தியுள்ளன. அந்நூல்களைப் பயில்பவருக்கு அச்சொற்களின் நிலையும், பொருளின் நிலையும் விளங்குதல் வேண்டுமே என்ற சிந்தனை காரணமாகவே அவர்கள் அவ்வாறு இலக்கண நூல்களைச் செய்தனர் என அறிதல் வேண்டும். இதனை இலக்கணக் கொத்து - ஒழிபியல் - 14 ஆம் சூத்திர உரையில் அந்நூலாசிரியரே எழுதி வைத்துள்ளார்.

இன்மை - அன்மை வேறுபாடு

இதனிடையே இன்மை, அன்மை என்பன இரண்டற்கும் ஒரே பொருள்தானே? இவற்றிடையே என்ன வேற்றுமை உள்ளது என்று சிலருக்கு ஐயம் தோன்றலாம். இன்மை - ஒரு பொருளின் இல்லாமையை மட்டும் உணர்த்தும், அன்மை - அப்பொருள் இல்லை ஆனால் அதே தன்மையுடைய பிறிதொரு பொருள் உண்டு என்பதை உணர்த்தும்.

உதாரணம்

முயலுக்குக் கொம்பு உண்டா? இல்லை. இது கொம்பு இல்லை என்பதை மட்டும்தான் உணர்த்தும்.

வேறொரு கேள்வி

முயலின் தலையில் இருப்பது கொம்பா? (இந்தக் கோள்வியைக் கேட்பவன் முயலின் தலையில் நேரே நிமிர்ந்து நிற்கும் காதைப் பார்த்துக் கேட்கிறான் எனத் தெரிகிறது) இதற்குக் கொம்பு இல்லை என்று பதில் சொல்லுதல் பொருந்தாது. கொம்பு அன்று என்று சொல்லுதல் வேண்டும். இந்தப் பதிலுக்குக் கருத்து என்ன? கொம்பு போன்று உள்ள அது கொம்பு அன்று, காது என்பது பதில்.

அங்கே தோன்றுகின்ற உருவம் மனித உருவமா? மரத்தூண் உருவமா? இந்த வினாவுக்கு இவ்வாறே பதில் சொல்லுதல் வேண்டும் (மனித உருவம் இல்லை என்று பதில் சொல்லுதல் பொருந்தா து. மனித உருவம் அன்று, மரத்தூண் உருவம் எனக் கூறுதல் வேண்டும்) இவ்வாறு இன்மைச் சொல்லும் அன்மைச் சொல்லும் பொருள் உணர்த்தும் முறையில் வேற்றுமை உடையன என அறிதல் வேண்டும்.

எண்ணுப் பொருளின் மேல் வரும் "ந"

இனி எண்ணுப் பெயரின் முன் "ந" என்னும் எதிர்மறை சேர்ந்து வந்தால் அவ்வெதிர்மறை அன்மைப்பொருளில் தான் வரும் என்பது வடமொழி இலக்கணவிதி என்பதையும் இங்கு மனத்தில் கொள்ளுதல் வேண்டும். அன்மைப் பொருளையே பதஞ்சலி மகாபாஷ்யக்காரரும் 2 - ஆம் அத்யாயத்து 2 ஆம் பாதத்து - 1 ஆம் ஆந்நிகத்து 6 ஆம் சூத்திரத்தில் எடுத்தாண்டிருக்கிறார் என்பதைக் காசி வாசி செந்திநாதையர் என்பவர் தமது சிவஞான போம் வசனாலங்கார தீபம் என்னும் உரையில் (சூத்திரம் 2 - சூர்ணிகை) குறிப்பிட்டிருக்கின்றார்.

இதுவரை கூறியவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டு அத்துவிதம் என்பதற்குச் சங்கரர் முதலியோர் கூறிய பொருள்களுள் உண்மையான பொருள் ஏது ? என ஆராய்ந்து காணுதல் வேண்டும்.

இன்மை - அபேதவாதம் - சங்கரர்

சங்கரர் தத்அபாவம் என்னும் இன்மைப்பொருள் கொண்டார். ந+துவைதம் = இரண்டில்லை. ஒன்றுதான் உள்ளது என்பது இவர் கொண்ட பொருள்.

சங்கரருடைய கொள்கை ஏகான்மவாதம் எனப்படும். அதாவது பரமாத்மா எனப்படும் ஒரு பொருள் மட்டுமே உண்டு. அதுவே பிரம்மப் பொருள். அந்தப் பிரம்மம் சக்தி, குணம் முதலிய அடைமொழிகளால் சிறப்பித்துக் கூறப்படாதது. தான் மட்டுமாக (கேவலம்) இருப்பது. அந்தப் பிரம்மமே ஜீவனாக ஜகத்தாக (உலகமாக)த் தோற்றம் அளிக்கின்றது. அது பொய்த் தோற்றமே. பிரமம் மட்டுமே உண்மை. பிரம்மமே ஜீவனாகவும், ஜகத்தாகவும் தோன்றுவதனால் பிரமத்துக்கும் ஜீவனுக்கும் பேதம் இல்லை. பிரத்;துக்கும் ஜகத்துக்கும் பேதம் இல்லை. பொன்னுக்கும், பொன்னாலான ஆபரணங்களுக்கும் எப்படிப் பேதம்

சொல்லுதல் இயலாதோ அப்படியே பிரமத்துக்கும், ஜீவ ஜகத்துக்களுக்கும் பேதம் சொல்லுதல் இயலாது.

இவர் இவ்வாறு கூறுவதனால் இவர் கொள்கை ஏகான்மவாதம் என்றும் அபதேவாதம் என்றும் கேவல அத்வைதம் என்றும் சொல்லப்படும். நிர்விசேஷ அத்வைதம் என்பதும் இதற்குப் பெயர். நிர்விசேஷம் - விசேஷணம் - அடைமொழி இல்லாதது.

ஏகான்மவாதிகள் அத்துவிதம் என்ற சொல்லுக்கு இன்மைப் பொருள் கொண்டனர். இரண்டு இல்லை. எனவே ஒன்றுதான் உண்டு என்றனர். இரண்டு இல்லை என்றால் ஒன்றுதான் உண்டு என்னும் பொருள் எவ்வாறு கொள்ளப்படும்? இரண்டு பொருளும் இல்லை அதாவது சூனியம் என்றும் கொள்ளலாம் அல்லது இரண்டு பொருள்கள் உள்ளன என்றும், இரண்டுக்கு மேற்பட்ட மூன்று நான்கு பொருள்கள் உள்ளன என்றும் கருத்துக் கொள்ளலாமே.

சிலர் இரண்டு இல்லை என்பது ஒன்று என்பதற்குத்தான் பொருந்தும். மூன்று நான்கு முதலியவற்றுக்குப் பொருந்தாது. மூன்று நான்கு முதலியவற்றில் இரண்டு உள்ளது. ஆதலின் இரண்டு இல்லை என்பது ஒன்றே உள்ளது எனப் பொருள்படும் என இதற்கு விளக்கம் கூறுவர். ஆகவே அத்துவிதம் என்பதற்கு இன்மைவாதிகள் கூறும் பொருள் வரையறையான பொருளன்று எனலாம்.

எண்ணுப் பெயரின் முன்வந்த நகரம் இன்மைப் பொருள் உணர்த்தாது. இதற்கு உதாரணம்:

''ஏகம்'' என்பது ஒன்று என்னும் பொருளுடைய எண்ணுப் பெயர். இதன்முன் எதிர்மறை சேர்த்து ந + ஏகம் என்று கூறினால் ஒன்று இல்லை என்று பொருள் வருமா? ந + ஏகம் = அநேகம், அநேகம் பல. என்றல்லவா பொருள்

வருகின்றது. ஆதலின் அத்துவிதம் என்பதற்கு இரண்டு இல்லை என்றும் அதன் கருத்து ஒன்று என்றும் பொருள் கொள்வது தவறு என்றாகும்.

ஏகம் என்பதன் பொருள்

அப்படியானால் சில இடங்களில் 'ஏகம்' என்றும் சொல்லியிருக்கின்றதே என்றால் அந்த ஏகம் என்பதற்குக் கருத்து, பிரம்மப் பொருள் ஒன்று மட்டுமே. இரண்டு மூன்று பிரம்மப் பொருள்கள் இல்லை என்பதேயாகும். பிரம்மப் பொருளுக்கு வேறாக வேறு பொருள் இல்லை என்பது அதன் கருத்தன்று.

"ஏகம் ஏவ அத்விதீயம் பிரமம்" என்பதில் ஏகம் என்று முதலில் சொல்லிவிட்டு அதனையே மீண்டும் அத்விதீயம் என்னும் சொல்லால் ஒன்று என்று உணர்த்தினார் என்பது பொருத்தமுடைய பொருளன்று. பிரம்மப் பொருளுக்கு ஏகம் என்னும் ஒரு நிலைமையும் அத்வீதியம் என்னும் ஒரு நிலையுமாக இரண்டு நிலைமைகள் உள்ளன என்பதே அதன் கருத்து.

ஏகம் என்னும் நிலைமையாவது, தனக்கு இணையான இன்னொரு பொருளில்லாமல், பிற பொருளின் கலப்பினால் தன் தன்மைக்குக் குறைவுபடாமல் இருப்பது. இதனைத் தமிழில் "ஒருவன்" என்று திருமுறைகள் கூறும்.

ஒருவன் என்னும் ஒருவன் காண்க
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
(திருவாசகம் - திருஅண்டப்பகுதி 43, 44)

அத்துவிதம் என்னும் நிலைமையாவது, ஏகமாகிய அப்பொருள் அதனைப் போன்ற சித்துப் பொருளாகிய உயிர்களோடும் ஜடப்பொருளாகிய பாசங்களோடும் வேற்றுமையன்றி - இரண்டு என்னும் தன்மை தோன்றாமல் - ஒன்றென்னும் தன்மையாய் இருக்கும் நிலைமை, பொருளால் இரண்டு, கலப்பினால் ஒன்று. ஆதலின் இதனை இரண்டென்றும் சொல்லல் பொருந்தாது.

ஒன்று என்றும் சொல்லல் பொருந்தாது. எனவே ஒன்று போல் தோன்றுகின்ற இரண்டு - இரண்டாய்த் தோன்றாத இரண்டு என்னும் கருத்தில் அத்துவிதம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். இதனை இரண்டற்று நிற்றல் என்பர்.

அத்துவிதம் - அர்த்தநாரீஸ்வரர்

ஒருவகையில் **அத்துவிதம்** என்பது அர்த்தநாரீஸ்வரர் போன்றது. அர்த்தநாரீஸ்வரரை ஆண் என்ற கருதி ஒருவன் என்று சொல்லலும் ஆகாது. பெண் என்ற கருதி ஒருத்தி என்று சொல்லலும் ஆகாது. எனவே ஒருவர் என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். ஒருவர் என்னும் சொல்லிலும் பகுதி (ஒன்று) ஒருமையாகவும் விகுதி (அர்) பன்மையாகவும் இரண்டு நிலையும் இணைந்தே உள்ளது என்பதும் இங்குக் கருதுதல் வேண்டும். (குமரகுருபரர் - சிதம்பரச் செய்யுட் கோவை 54)

அத்துவிதம் என்ற சொல்லிலும் ஒன்று என்ற நிலைமையும் உண்டு - இரண்டு என்ற நிலைமையும் உண்டு. இரண்டு என்ற நிலை இருப்பதனால் ஒன்று எனல் ஆகாது. ஒன்று என்ற நிலையிருப்பதனால் இரண்டு எனலும் ஆகாது.

ஒன்றாய் இருந்தால் ஏகம் எனலாம். இரண்டாக மட்டும் இருந்தால் துவி எனலாம். பலவாக இருந்தால் பகு எனலாம். சிவம் (பிரம்மப் பொருள்) தான் ஒன்றாய் இருந்தே சித்துப்பொருளாகிய உயிர்களோடும், ஜடப்பொருளாகிய பிரபஞ்சத்தோடும் - தனித்தனியே கலந்து இரண்டற்று நிற்பதனால் அத்துவிதம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆதலின் சங்கரர் கொண்ட இன்மைப் பொருள் உண்மையான பொருளன்று எனத் தெரிகின்றது.

இன்மைப் பொருள் -பேதாபேத வாதம் - இராமானுஜர் - விசிஷ்ட்ட அத்வைதம்.

இனி, இராமனுஜர் கொண்ட பொருளைப் பார்க்கலாம். இவரும் இன்மைப் பொருளே கொண்டனர். எனவே சங்கரர் கொள்கைக்கு உரைத்த மறுப்பு இவருக்கும் ஆகும்.

எனினும், இவர் சங்கரரைப் போல் பிரம்மப்பொருள் ஒன்று மட்டுமே உண்மை. மற்ற பொருள்களெல்லாம் (ஜீவன், ஜகத்) வெறும் தோற்றம் என்றோ பிரம்மப் பொருள் சக்தி, குணம் முதலிய விவேம் இல்லாதது என்றோ கூறவில்லை.

இராமானுஜர் சித், அசித், ஈஸ்வரன் என்ற மூன்று பொருள்களும் உண்மைப்பொருள் என்ற கொள்கிறார். சித் - உயிர்கள். அசித் - பிரபஞ்சம், ஈஸ்வரன் - பிரம்மப்பொருள். இந்தப் பிரம்மப் பொருளும், சித், அசித்துப் பொருட்களும் சரீரி, சரீர பாவத்தால் (சரீரி- உடம்பை உடையது. சரீரம் - உடம்பு. சித்தும், அசித்தும் பிரம்மப் பொருளுக்கு உடம்பு. பிரம்மப் பொருள் அவ்வுடம்பில் கலந்திருக்கும் உயிர்) கலந்திருப்பது. எனவே சித்தும், அசித்தும் பிரம்மத்துக்கு விசேஷணம் என்றும் பிரம்மப் பொருளுக்கு அதனது சக்தியும் குணமுமாகிய விசேஷணங்கள் உண்டு என்றும் கொள்கிறார்.

இவ்வாறு இரண்டு நிலையும் கூறுவதனால், இவர்கள் கொள்கை பேதாபேத வாதம் எனப்படும். இவர்கள் ஈஸ்வரனுக்குப் பரிணாமமும் கூறுவதனால் பரிணாமவாதிகள் எனவும் கூறுவர்.

இங்ஙனம் விவேஷணத்துடன் கூடிய பிரம்மப் பொருள் ஒன்று என்று இவர் கூறுவதனால் இவர் கூறும் அத்வைதம், விசேஷ - விசிஷ்ட - அத்வைதம் எனப்படும். (விசிஷ்டம் - விசேஷண விசேஷியங்கள் இணைந்தது)

விசிஷ்டாத்வைதமும் சித்தாந்த சைவமும்

இவர் இங்ஙனம் கூறியன எல்லாம் சித்தாந்த சைவத்துக்கு உடம்பாடே. எனினும் இவர் அத்துவிதம் என்பதற்கு இரண்டில்லை என்று இன்மைப் பொருளே கொண்டதனால் இதுவும் சித்தாந்த சைவத்துக்கு ஏலாததாகவே உள்ளது.

இதுவன்றிப் பிரம்மப் பொருளுக்குச் சொல்லுகின்ற இலக்கணத்திலும் ஆன்மாவுக்குச் சொல்லுகின்ற இலக்கணத்திலும் தத்துவங்களின் தொகை கொள்ளுகின்ற முறையிலும் முத்திநிலை கூறுகின்ற முறையிலும் இவர் பெரிதும் வேறுபாடுகின்றார். அது தனியே சிந்திக்கத்தக்கது.

இவர் பிரம்மப் பொருளுக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள சம்பந்தம் சொல்லுக்கும், பொருளுக்கும் உள்ள சம்பந்தம் போல் பேதாபேத சம்பந்தம் எனக் கூறுவர். சொல் வேறு, பொருள் வேறு ஆதலின் பேதம். சில இடங்களில் சொல்லைச் சொன்னால் பொருள் உணரப்படுகின்றது. சொல்லே பொருள் போலவும் கருதப்படுகின்றது. பொருள் உயிர் போன்றது. சொல் அதற்கு உடம்பு போன்றது. சொல்லினிடமாக இருந்து பொருள் புலப்படுகின்றது. **தமிழ் இலக்கணத்தில் சில இடங்களில் சொல்லே பொருளாக - அபேதமாகக் - கூறப்படும். இதனைத் தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரியியல் சூத்திரங்களை நோக்கி உணர்ந்து கொள்ளலாம்.**

சித்தாந்த சைவம் சொல்லும் பொருளும் போல் என்ற உவமையை ஒத்துக் கொள்ளும். ஆனால் அவ்வுவமையைச் சிவத்துக்கும் சத்திக்கும் உள்ள சம்பந்தத்துக்குக் கூறும். ஆன்மாவுக்கும் சிவத்துக்கும் உள்ள சம்பந்தத்துக்கு அவ்வுவமை பொருந்தாது. சொல் - வடிவம், பொருள் - அவ்வடிவால் விளங்குவது. அதுபோல் சத்தி சிவத்துக்கு வடிவம், சிவம் அவ்வடிவை இடமாகக் கொண்டு விளங்குவது. ஆன்மா சிவத்துக்கு வடிவமன்று. எனினும் ஆன்மா சிவம் விளங்குவதற்கு இடமாக இருக்கும். வடிவம்

வேறு. இடம் வேறு. ஆதலின் பேதாபேதவாதிகள் கூறுகின்ற சொல்லும் பெருளும்போல் ஈஸ்வரனும் சித்து அசித்துக்களும் பேதாபேதம் என்னும் கொள்கை சித்தாந்த சைவத்துக்கு உடம்பாடன்று.

மேலும் பேதாபேதம் என்பது ஒருக்கால் பேதமாயும் ஒருக்கால் அபேதமாயும் முடியுமேயன்றி பேதாபேதம் என்ற ஒருநிலை எப்போதும் உண்டு என்பதும் பொருத்த மற்றதேயாகும். பேதாபேதவாதிகளும் அபேதவாதிகள் கூறுகின்ற ஏகான்மவாதம் மாயாவாதம் என்பதை மறுத்துரைப்பதனால் அவர்கள் சித்தாந்த சைவத்துக்கு ஒருவகையில் உபகாரம் செய்தவர்களேயாவர்.

இவர் பிரம்மப்பொருளே பிரபஞ்சமாகப் பரிணமித்தது என்பர். ஆதலின் ஒருவகையால் பிரம்மமும் பிரபஞ்சமம் அபேதம். ஒருவகையில் பேதம் என்பது இவர் கொள்கை.

இன்மைப் பொருள் - பேதவாதம் - துவைதம்

இனி, மத்துவர் கொண்ட பொருளைப் பார்க்கலாம். இவரும் இன்மைப் பொருள் கொண்டவரே.

மத்துவர் உலகில் உள்ள பொருள்களுக்கும் பிரம்மத்துக்கும், ஜீவர்களுக்கும் பிரம்மத்துக்கும் உள்ள பேதங்களை மிகவும் வற்புறுத்துபவர். எனவே இவர் கொள்கை பேதவாதம் எனப்படும்.

பிரம்மமும் ஜீவர்களும் பேதப்பொருள்கள். இவ்விரண்டும் எப்பொழுதும் ஒன்றாவதில்லை என்பதும் இவர் கொள்கை. பிரம்மமும் உண்டு. அதற்கு எதிரிடையான ஜீவர்களும், பிரபஞ்சமும் உண்டு. அதர்மம் என்று சொன்னால் தர்மம் என்பது ஒன்று உண்டு. அதற்கு எதிரான அதர்மம் என்பது ஒன்று உண்டு எனக்கொள்வது போல் துவிதம் என்பதனால் இரண்டு என்ற பொருளும் அத்துவிதம்

என்பதனால் ஒன்று என்ற பொருளும் ஆக இரு பொருள்கள் உள்ளன என்பது பெறப்படும். எனவே, இரண்டாவதாகக் கூறப்படும் ஜீவர்கள், ஜகத்து ஆகியவற்றுக்கு எதிரான பொருளாகிய பிரம்மப்பொருள் ஒன்று என்று இவர் முடிவு செய்கிறார். பிரம்மப் பொருளும் ஜீவர்களும், இரண்டும் தனித்தனியே இருப்பவை என்பதனால் இவர் கொள்கை துவிதம் எனப்படும்.

துவைதமும் சித்தாந்த சைவமும்

இவர் கொண்ட முடிவில் பிரமமும் உண்டு. ஜீவர்களும் உள்ளனர், ஜகத்தும் உண்டு என்பதும் பிரம்மப்பொருள் ஒன்றுதான், இரண்டு, மூன்று பிரம்மங்கள் இல்லை என்பதும் பிரம்மப் பொருளோடு ஜீவர்களுக்குப் பேதம் உண்டு, பிரம்மப் பொருளோடு ஜகத்துக்குப் பேதம் உண்டு என்பனவும் சித்தாந்த சைவத்துக்கும் உடன்பாடுதான். என்றாலும், அத்துவிதம் என்பதற்கு இன்மைப் பொருள் கொண்டதும் பிரம்மமும் ஜீவர்களும் எப்பொழுதும் ஒன்றாகச் சேர்வதில்லை என்பதும் சித்தாந்த சைவத்துக்கு ஏலாதது.

இவர் சொல்கின்ற பேதவாதத்துக்கு இருட்டும் வெளிச்சமும் போல் என்று உவமை சொல்வார்கள். இருட்டும், வெளிச்சமும் எப்பொழுதும் ஒன்று சேர்வதில்லை. ஒன்றன்முன் ஒன்று எதிரிட்டு நிற்பதுமில்லை. இரண்டும் வெவ்வேறாய் இருப்பதனால் இது துவிதவாதம் எனப்படுகிறது.

இம்மூவரும் கூறும் அத்துவிதப் பொருள் பொருத்தமற்றது எனக்கண்டோம். இனி மெய்கண்டார் கூறும் பொருள் யாது எனப்பார்ப்போம்.

மெய்கண்டார் கூறும் அத்துவிதப் பொருள்

மெய்கண்டார் அன்மைப் பொருள் கொண்டார். எண்ணுப் பொருளின் முன்வரும் "ந" என்னும் எதிர்மறை அன்மைப் பொருளை மட்டுமே உணர்த்தும். இன்மை மறுதலைப் பொருள்களை உணர்த்தாது என்பது முன்னமே கூறப்பட்டது.

மெய்கண்டார் கூறும் அன்மைப் பொருளாவது ந + துவிதம் = இரண்டன்று அதாவது இரண்டு பொருள்கள், இரண்டற்று நிற்றல். ஒன்று போல் தோன்றுகின்ற இரண்டு பொருள்கள் உள்ளன என்பது. இரண்டு உண்டு. ஆனால் இரண்டு எனல் பொருந்தாது. அவை பிரிந்து நிற்றல் இல்லை. அதனால் ஒன்று எனலாமோ. என்றால் இரண்டு பொருட்களில் - ஒன்று கெட்டு ஒன்று மட்டும் இருந்தாலான்றோ ஒன்று எனல் பொருந்தும். கெடவில்லையே. இவ்விரு பொருள்களும் (பெத்தத்திலும் சுத்தத்திலும்) கலந்தே இருக்கின்றனவே!. கலப்பினால் ஒன்று எனத் தோன்றுகின்றது அவ்வளவே. ஆதலின் ஒன்றெனலாகாது. ஒன்றும் இல்லை. இரண்டும் இல்லை என்று சொல்லிவிடலாமே என்றால் அப்பொழுது சூனியந்தான் உள்ளது என்றாகும். இந்தச் சிக்கலை நீக்குவதற்குத் தான் ஒன்று (ஏகம்) என்ற சொல்லாமல் அத்துவிதம் என்று சொல்லப்பட்டது என்பது இவர்தரும் விளக்கம்.

மெய்கண்டாருடைய தலைமாணாக்கராகிய அருள்நந்தி சிவம் தமது இருபா இருப:து என்னும் நூலில் "ஒன்றாகாமல், இரண்டாகாமல், ஒன்றும் இரண்டும் இன்றாகாமல்" (செய் 20) என இந்நிலையை விளக்கியுள்ளார்.

அனேகன் :

மாணிக்கவாசகர் இறைவனை,

ஏகன் அனேகன் இறைவன்

என்று குறிப்பிடுகின்றார் (சிவபுராணம் வரி 5), இதனையே திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார்.

ஏகனுமாகி அநேகனுமானவன் நாதனும் ஆனான்

என்று குறிப்பிடுகின்றார். (திருவுந்தியார் - 5)

இங்கு ஏகனாக (ஒருவனாக) உள்ள இறைவனே தன்மை திரியாமல் பல பொருள்களோடும் (சித்து, அசித்து என்னும் எல்லாப் பொருள்களுடனும்) அவையேயாகக் கலந்து பலவாகவும் உள்ளான். அவன் எல்லாப் பொருள்களுக்கும் தலைவன் (இறைவன், நாதன்) ஆதலின் அவனால் அவ்வாறு இருத்தல் இயலும் என்பது பெறப்படுகிறது.

இங்கு அநேகன் என்பதற்கு **இன்மைப் பொருள் கொண்டால்** (ந + ஏகன், அந் + ஏகன் = அநேகன்) ஏகன் எனப்படும் இறைவன் இல்லை என்று பொருள்வரும். இப்படிப் பொருள்கொள்ளலாமா?

மறுதலைப் பொருள் கொண்டாலோ ஏகனும் இருக்கின்றான், அவனுக்கு எதிரான அநேகனும் இருக்கின்றான் என்று பொருள் வரும். ஏகனும் அநேகனும் ஒருவருக்கொருவர் எதிர்மறையாக இருப்பவர்கள் என்று பொருள் வரும். அப்படியானால் ஏகனாகிய இறைவனால் அநேகனாகிய ஆன்மாக்களுக்குப் பயனில்லை, அநேகனாகிய ஆன்மாக்கள் ஏகனால் பயன் கொள்ளமாட்டா என்று பொருள் கொண்டால் தத்துவ ஞானமே பயனற்றதாய்விடுமே.

இன்னும் அநேகன் என்பதில் அன் என்னும் ஒருமை விகுதி இடம் பெற்றிருத்தலையும் கவனித்தல் வேண்டும். சித்தாகிய ஆன்மாக்களைக் கருதினால் அநேகர் என அர் விகுதி வருதல் வேண்டும். சடப்பொருளைக் கருதினால் அநேகம் என்று அஃறிணையை உணர்த்திவருதல் வேண்டும்.

சித்துப் பொருள்களோடும் சடப்பொருள்களோடும் கலந்திருந்தாலும் இறைவன் அநேகரும் ஆவதில்லை, அநேகமும் ஆவதில்லை. ஏகனாகவே இருக்கிறான் என்பதை மனங்கொள்ளுதல் வேண்டும்.

அன்மைப் பொருள் கொண்டால் இறைவன் அநேகனாக இருந்தும் அநேகனல்லன், ஏகன் என்னும் தன்மையில் திரிதல் இல்லை. எனவே, அவன் பலபொருள்களோடு கூடி அவையேயாகவும் இருப்பான்; அவற்றின்வேறாய்த் தனியாகவும் இருப்பான்; அவற்றோடு கூடி அவற்றை இயக்கிக்கொண்டுமிருப்பான்.

இம்மூன்று நிலையும் அவனுக்கு எப்பொழுதும் உண்டு. அதனால்தான் அவனை இறைவன், நாதன் என்னும் சொற்களால் கூறுகிறோம்.

இறை - தலைமை, தங்குதல் என்னும் இருபொருள்களை உடையசொல். இறைவன் எல்லாப் பொருள்களுக்கும் தலைமையானவன், எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்பவன் என இறைவனுடைய இயல்பை இச்சொல் விளக்கி நிற்பது அறியத்தக்கது.

அத்துவிதம் ஒருவகைச் சம்பந்தம்

மெய்கண்டார் அத்துவிதம் என்பதனை - ஒன்று - இரண்டு என எண்ணிக்கையாக நோக்கவில்லை. சிவத்துக்கும் ஆன்மாவுக்கும் - சிவத்துக்கும் பாசத்துக்கும் - சிவத்துக்கும் சக்திக்கும் உள்ள சம்பந்தமாக நோக்குகின்றார்.

சிவமும் சக்தியும் இரண்டாகக் கூறப்பட்டாலும் அவை குணகுணியாகப் (சிவம் - குணி, சக்தி அதன் குணம்) பிரிக்க முடியாதபடிக் கலந்திருக்கும். அச்சம்பந்தம் தாதான்மியம். இதுவும் அத்துவிதத்தில் ஒருவகை.

சிவமும் ஆன்மாக்களும் சிவமும் பாசங்களும் பொருளால் வேறாயினும் சிவத்தை இன்றி இவற்றுக்கு இருப்போ, இயக்கமோ இல்லையாதலின் சிவம் தன்னை ஒத்த சித்துப் பொருளாகிய ஆன்மாக்களோடும் தன்னின் வேறான அசித்துப் பொருளாகிய பாசங்களோடும் தன் வியாபகத் தன்மையால் தன்னின் வியாப்பியமான அப்பொருள்களோடு கலந்து ஒன்றாக இருக்கும். இங்ஙனம் இரண்டு பொருள்கள் பிரிப்பின்றிக் கலந்திருக்கும் சம்பந்தம் அத்துவித சம்பந்தம் எனப்படும். அவற்றுள் ஆன்மாக்களொடு கலந்திருக்கும் சம்பந்தமே சிறந்து எடுத்தப் பேசப்படும். ஆன்மா மட்டுமே சிவத்தை உணர்ந்து, சிவத்தைச் சார்ந்து, சிவானந்தம் அனுபவிப்பதற்குரியது. ஆதலின் மெய்கண்டார் கூறும் சித்தாந்தசைவக் கொள்கையைச் சிறிது விளங்கிக் கொண்டால் தான் இவர் கூறும் அன்மைப் பொருள் விளங்கும்.

சித்தாந்த சைவம் :

மெய்கண்டார் சிவம், சக்தி, ஆன்மா, ஆணவம். கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை என்னும் பொருள்கள் அநாதி என்பர். இவற்றுள் சிவம் சக்தி

இரண்டும் ஒன்று. குணமும் குணியும். எனவே ஆறு பொருள்கள் என எண்ணப்படும். இச்சிவ வியாபகத்தில் ஆன்மா வியாப்பியம். ஆன்மாவில் ஆணவம் வியாப்தி. மாயை கன்மங்கள் சிவத்தை ஆதாரமாகக் கொண்டு இருப்பன. எனவே இவையும் வியாப்பியம். வியாகப் பொருள் வியாப்பியப் பொருள்களில் கலந்திருக்கும். வியாப்பியப் பொருள்கள் வியாபகப் பொருளைத் தமக்கு இன்றியமையாததாகக் கொண்டிருக்கும். வியாபகப் பொருள் ஒன்றாய்த்தான் இருக்கும். வியாப்பியப் பொருள் பலவாக இருக்கலாம்.

இங்ஙனம் வியாபகமாகிய சிவம் ஆன்மாக்களோடு பெத்தத்திலும், முத்தியிலும் கலந்தே இருக்கின்றது. ஆனால் பெத்தத்தில் ஆன்மாவே முனைத்துத் தெரிகின்றது. ஆதலின் இரண்டு பொருள்கள் இணைந்தே இருந்தாலும் ஒரு பொருள் தான் உள்ளது எனத் தோன்றும். அவ்வாறே சுத்தத்தில் சிவமே முனைத்து நிற்கின்றது. ஆன்மா தான் ஒருபொருள் இல்லையென்னும் படியாகவும் தன் செயல் என ஏதும் இல்லை என்னும்படியாகவும் அடங்கி நிற்கின்றது. ஆதலின் சுத்தத்தில் இரண்டு பொருள்களும் இணைந்தே இருந்தாலும் ஒரு பொருள் மட்டுமே உள்ளது எனத் தோன்றும்.

இங்ஙனம் இரண்டு பொருட்கள் இணைந்திருந்தாலும் ஒன்று மட்டுமே உள்ளது போல் தோன்றுதல் என்னும் நிலை பெத்தம், சுத்தம் என்ற இருநிலையிலும் உண்டு என்பது சித்தாந்த சைவம்.

ஆனால் சங்கரர் பாராமார்த்திகத்தில் (பிரம்மப் பொருள் தன்னைப் பலவாகத் தோற்றிக் கொள்ளும் நிலையிலிருந்து நீங்கித்தான் மட்டுமாக - கேவலமாக - இருக்கும் நிலை) ஒன்று. வியவகாரத்தில் (உலக நடைமுறை நிலை) பல எனக்கூறுவர்.

சிவஞானபோதத்தில் அத்வைதம்

மெய்கண்டார் தமது அத்வைதக் கொள்கையைத் தமது சிவஞான போதம் என்னும் நூலின் இரண்டாஞ் சூத்திரத்தில் தொடங்கிப் பதினோராஞ் சூத்திரத்தில் முடித்துக் காட்டியுள்ளார். இரண்டாஞ் சூத்திரம் பெத்த நிலை. பதினோராஞ் சூத்திரம் சுத்தநிலை.

மெய்கண்டார், சிவம் ஆன்மாக்களின் பொருட்டு ஐந்தொழில் செய்யுமிடத்து எங்கிருந்து கொண்டு செய்யும் என்பதற்கு விளக்கம் சொல்பவராக ''அவையே தானேயாய்'' இருந்து செய்யும் என்கிறார். இதனை

1.அவையேயாக இருந்து எனவும்

2. தனோயாக இருந்து எனவும்

3. அவையே தானேயாக இருந்து எனவும்

மூன்று வகையாக - இருந்து செய்யும் எனப்பொருள் கொள்ளுதல் வேண்டும். இதற்கு மெய்கண்டாரே ''இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாக நிற்கும்'' என்று பொருள் உணர்த்திக் காட்டியிருக்கின்றார். (சூத் 2.அதி 1, மேற்கோள்) இத்தொடருக்கும் *1. முதல்வன் இவ்வான்மாக்கள் பலவாகவும் 2. தானேயாகவும் 3. இவ்வான்மாக்கள் பலவாகவும், தானேயாகவும் நிற்கும்* என மூன்று வகையாகப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

அத்துவிதம் - மூன்றற்கும் பொதுவாக நிற்றல்

இம்மூன்றனுள் 1.அவையேயாயாதல் - ஒன்றாய் நிற்றல் - அபேதசம்பந்தம் எனவும் 2. தானேயோதல் - வேறாய் நிற்றல் - பேத சம்பந்தம் எனவும் 3. அவையே தானேயாதல் - உடனாய் நிற்றல் - பேதாபேத சம்பந்தம் எனவும் கொள்ளுதல் வேண்டும். அத்துவிதம் என்னும் சொல் இம்மூன்று நிலைக்கும் பொதுவாய் நிற்பது என்பது மெய்கண்டார் தரும் விளக்கம்.

எனவே, அத்துவிதம் என்பதற்கு ஒன்று என்றோ இரண்டு என்றோ பொருள் கொள்ளுதல் உண்மையான பொருளாகாது.

மெய்கண்டார் சங்கரரை மறுக்கும் முறை

இந்த இரண்டாஞ் சூத்திரத்து முதலதிகரண மேற்கோளுக்கு ஏதுவாக்கியம் கூறவந்த மெய்கண்டார், சங்கரர் கூறும் ஒன்று என்னும் பொருள் யுக்திக்கும் சொல் இயல்பிற்கும் பொருத்தமற்றது என்று காட்டியுள்ளார்.

மெய்கண்டார் கூறிய ஏதுவாக்கியம் "1. அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னில் 2. ஏகம் என்று சுட்டுவது உண்மையின் 3. அத்துவிதம் என்ற சொல்லே 4. அந்நிய நாத்தியை (அந்நியம் இன்மை) உணா;த்துமாயிட்டு" என்பது

1.இந்த ஏதுவாக்கியத்தில் "அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னில்" என்னும் பகுதி சங்கரருடைய கொள்கையை அனுவதித்துக் (அவர்கள் கூறியதைத் திரும்பவும் தாம் ஒருமுறை எடுத்துக் கூறுதல்) கூறியது.

சங்கரர் வேதத்தில் அத்துவிதம் என்ற சொல் உள்ளது. அதற்கு இரண்டு இல்லை என்பதே பொருள். எனவே பிரம்மப் பொருள் ஒன்ற மட்டுமே உண்டு. வேறு பொருள்கள் இல்லை. இருப்பன போல் தோன்றவது பொய்த் தோற்றம், பிரம்மம் ஜீவனாகவும், ஜகத்தாவும் தோற்றமளிப்பது விவர்த்தணம் எனப்படும் என்பர். இது முன்னரும் விளக்கப்பட்டது.

பொருந்தும் முறையால் மறுத்தல்

2."ஏகம் என்று சுட்டுவது உண்மையின்" என்னும் பகுதி சங்கரர் கொள்கையை மெய்கண்டார் யுக்தியால் மறுத்துரைத்த பகுதி. பிரம்மம் ஏகம், பிரம்மம் ஏகம் என்று பிரம்மப் பொருள் தன்னைத் தானே கூறிக் கொண்டிருக்குமா? பிரம்மத்தை அறிந்து பிரம்மம் ஏகம்

என்று கூறுபவன் அந்தப் பிரம்மத்தின் வேறான பொருளாக இருத்தல் வேண்டும். ஆதலின் பிரம்மப் பொருள் ஒன்று மட்டுமே உள்ளது, வேறுபொருள் இல்லை என்பது பொருந்தாது என மறுத்தார்.

சொல் இயல்பினால் மறுத்தல்

3.''அத்துவிதம் என்ற சொல்லே'' என்பது அத்துவிதம் என்ற சொல்லியல்பைக் கொண்டு சங்கரருடைய கொள்கையை மறுத்துரைத்த பகுதி. அத்துவிதம் என்ற சொல்லியல்பாவது துவிதம் என்ற எண்ணுப் பெயர்மேல் எதிர்மறைப் பொருள் உணர்த்தும் ''ந'' சேர்ந்தால் அந்த 'ந' அன்மைப் பொருளை மட்டுமே உணர்த்தி ஒன்றாதல், வேறாதல், உடனாதல் என்னும் மூன்றற்கும் பொதுவாகவே வருதல் என்பது. இது முன்னரே விளக்கப்பட்டது.

அத்துவிதம் என்பதற்கு வேறுவேறு சொற்கள்

4.''அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு'' என்னும் பகுதி மெய்கண்டார் தமது கொள்கையை நிறுவும் பகுதி. நாத்தி - இல்லை. ந + அஸ்த்தி = நாஸ்த்தி. தமிழில் நாத்தி என வந்தது. நாத்திகம் என்பது போல. அத்துவிதம் என்ற சொல் அந்நியமின்மை - என்னும் பொருளை உணர்த்தும் என்பது மெய்கண்டார் கண்ட பொருள். அத்துவிதம் என்பதற்கு அந்நியமின்மை, வேறின்மை, பிரிப்பின்மை, ஒட்டியிருத்தல், உடந்தையாயிருத்தல் என்பன தமிழில் கூறும்பொருள். இச்சொற்களை நோக்கினாலே இரண்டு பொருள் இணைந்து ஒன்றாய் இருத்தல் என்பதே இவற்றுக்குப் பொருள் என்பது நன்கு விளங்கும். எனவே அத்தவிதம் என்பதற்கும் இரண்டு பொருள் இணைந்து ஒன்றாய், ஒன்று என்பதற்கும் இரண்டு என்பதற்கும் பொதுவாய், நிற்பது என்பதே பொருள். இதனை இரண்டு பொருள்கள் இரண்டு என்னும் தன்மையற்று நிற்றல் என்பர்.

இங்ஙனம் சங்கரர் கொள்கையை மறுத்துக்கூறிய மெய்கண்டார் தம் கருத்தை விளக்குவதற்கும் அத்துவிதம் என்ற சொல்லால் ஏன் சொல்ல வேண்டும் என்பதற்கும் உதாரணங்களுடன் விளக்கம் அளித்துள்ளார்.

மூவகைக்கும் மெய்கண்டார் கூறும் உதாரணம்

முதலில் ஒன்றாய் நிற்றல் - அபேதமாய் நிற்றல் - என்பதற்கு உதாரணம் : உடம்பும் உயிரும் போல என்பது. உடம்பும், உயிரும் வெவ்வேறு பொருள்கள். இன்னும் சொல்லப்போனால் உடம்பு - அசித்து. உயிர் - சித்து. உயிராகிய சித்து உடம்பாகிய அசித்துடன் கூடி உடம்பாகவே நிற்கிறது. உடம்புக்கு இட்ட பெயரைக் கூறி அழைத்தால் (பெயர், சாதி, நிறம், வடிவம் முதலியன உடம்புக்குத்தான் உள்ளன : உயிருக்கு இல்லை) உயிர் ஏன் எனக் கேட்கிறது. என்றாலும் உயிர் உடம்பாவதில்லை. உயிர் உயிரே. உடம்பு உடம்பே. இதனால் உடம்பில் உயிர் உடம்பெனத் தான் என வேறுபாடு இன்றி அபேதமாய் இருக்கிறது என்பது புலனாகிறது. இதனால் ஒன்றாய் நின்றாலும் ஒன்றன்று என்பது நிச்சயிக்கப்பட்டது.

இதுபோல் முற்றறிவாகிய சிவமும், சிற்றறிவாகிய உயிருடன் அபேதமாய் நிற்கும். நின்றாலும் சிவம் உயிராய் விடுவதில்லை. சிவம் சிவமே, உயிர் உயிரே. இதனால் சிவமும், உயிரும் ஒன்றாயிருந்தாலும் ஒன்றாதல் இல்லை என்பது புலனாகிறது. இதனால் அவையேயாதல் விளக்கப்பட்டது.

ஏகம் என்பதன் கருத்து

இதனைத் தொடர்ந்து வேதத்தில் ''பிரம்மம் ஏகம்'' என்றும் சொல்லப்பட்டுள்ளதே என்னும் வினாவுக்கு விடை கூறுகின்றார். ஏகம் என்பதற்கு ஒன்று என்பது தான் பொருள்.

அதன் கருத்து பிரம்மப்பொருள் ஒன்றுதான். இரண்டு மூன்று பிரம்மப்பொருள் இல்லை என்பதே மெய்கண்டார் கூறும் விடை. இதனால் பிரம்மப் பொருள் ஒன்று மட்டுமே உள்ளது. வேறுபொருள் இல்லை என்று சங்கரர் கூறும் கருத்து மறுக்கப்பட்டுள்ளது என அறியலாம்.

பிரம்மப் பொருள் இல்லை என்றால் ஒருபொருளும் இல்லை என்பதன் கருத்து

இதனைத் தொடர்ந்து பிரம்மப் பொருள் இல்லை என்றால் ஒருபொருளும் இல்லை என்ற கருத்தும் வேதத்தில் உள்ளதே (*''சராசராதி ஜந்தூனாம் சிவைக பிராண உச்யதே தம் விநா நபிரவிருத்தி ஸ்யாத் அக்ஷராணாம் அகாரவத்''* - சிவஞான போத வசனலங்காரதீபம் மேற்கோள்'') என்தற்கு மெய்கண்டார் விளக்கம் கூறுகின்றார். அங்ஙனம் கூறுவதற்கு எல்லாப் பொருள்களுக்கும் (வியாப்பியப் பொருள்) பிரம்மம் இன்றியமையாதது என்பதே கருத்து என மெய்கண்டார் கூறுகின்றார். அகரம் ஏனைய எழுத்துக்களுக்குப் பிராணனாக இருக்கின்றது. அதனால்தான் ஏனை எழுத்துக்கள் இயங்குகின்றன. அதனால் அகரம் இல்லையென்றால் ஏனை எழுத்துக்கள் இல்லை என்று கூறப்படும். இங்ஙனம் கூறப்படுவதால் அகர எழுத்து மட்டுமே உண்டு. வேறு எழுத்துக்கள் இல்லை என்று கூறமுடியாதல்லவா என்று மெய்கண்டார் தம் கருத்துக்கு விளக்கமும் கூறுகின்றார். இதனால் தானேயாதல் விளக்கப்பட்டது. வேறாயினும் வேறன்று என்பது நிச்சயம் செய்யப்பட்டது.

அத்துவிதம் என்ற சொல்லால் ஏன் கூறுதல் வேண்டும்

அங்ஙனம் இரண்டு பொருளும் இணைந்திருக்கு மென்றால் 'இரண்டு' என்று சொல்லிவிடலாமே! ஏன் அத்துவிதம் என்று சொல்லுதல் வேண்டும் என்பதற்கும் மெய்கண்டார் விளக்கம் கூறியுள்ளார். பண்ணில் ஓசை

பிரிப்பின்றி எங்கும் கலந்திருக்கின்றது. (பண் - குணி : ஓசை - குணம்) பழத்தில் சுவை எங்கும் கலந்திருக்கிறது. (பழம் - குணி : சுவை - குணம்) இவற்றைப் போல் சிவம் தன்னில் வியப்பியமான ஆன்மாவில் கலந்து நிற்கிறது. இங்ஙனம் கலந்திருப்பதால் இரண்டென்று சொல்லுதலும் பொருந்தாது. ஒன்றென்று சொல்லுதலும் பொருந்தாது. எனவே தான் பொதுவாக அத்துவிதம் என்று சொல்லப்பட்டது என்பதே மெய்கண்டார் கூறும் விளக்கம். இதனால் சிவம் உடனாயிருந்தும் உடனாகாமை விளக்கப்பட்டது. இது அவையே தானோயாதல் என்பதற்குக் காட்டப்பட்ட உதாரணம். இதற்குச் சிறந்த உதாரணம் 'கண்ணொளியும், ஆன்மபோதமும் போல்' என்பது பதினோராஞ் சூத்திரத்தில் கூறப்பட்டது.

மூன்றற்கும் ஒரே உதாரணம்

இங்ஙனம் அவையே யாதலுக்கும் (உடல் உயிர்) தானேயாதலுக்கும் (அகர எழுத்து - ஏனையெழுத்து) அவையே தானேயாதலுக்கும் (பண்ணும் ஓசையும்) தனித்தனி உதாரணம் காட்டிய மெய்கண்டார் ஓர் உதாரணத்திலேயே மூன்றையும் காட்டுகின்றார். அவ்வுதாரணம் சாணைக்கல். ''சாணைக்கல்'' என்பது, அரக்கை உருக்கி அதனுடன் கற்பொடிகளைச் சேர்த்துச் செய்யப்படுவது. சாணைக்கல்லில் அரக்கு என்றும் கற்பொடி என்றும் தனித்தனியாக இரண்டு பொருட்கள் உள்ளன. இது வேறாதல். இவை ஒன்றாய் இயைந்து நிற்கின்றன. இது ஒன்றாதல். இது எவ்வகையிலும் பிரிப்பின்றி நிற்றலால் உடனாதல். இவ்வாறு மூன்று நிலைகளையும் இவ்வுதாரணத்தில் வைத்துக் காட்டியுள்ளார்.

சங்க இலக்கியத்தில் இவ்வுதாரணம்:

இவ்வுதாரணம், சங்க இலக்கிய காலங்களில் கணவனும், மனைவியும் உடம்பால் இருவராய் இருந்தும் உள்ளத்துணர்வினால் பிரிப்பின்றி இயைந்து ஒருவராய் இருப்பதற்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. ''*சிறுகாரோடன் பயினோடு சேர்த்திய கற்போல் பிரியலம்*'' (அகநானூறு 1,356) காரோடன் - சாணை பிடிப்பவன். பயின் - பிசின், அரக்கு. பயினொடு சேர்த்திய கல் - சாணைக்கல்.

உயிர்களும் மூவகையாக நிற்குமா?

இதனைத் தொடர்ந்து சிவம் மட்டும் தான் 1. உலகாகவும் 2. தானேயாகவும், 3. தானேயாகவும் உலகேயாகவும் நிற்குமா? ஆன்மாக்களும் அவ்வாறு நிற்கும் எனத் தெரிகிறதே. நூல்களில் முனிவர்கள் சிலர் தம்மை அவ்வாறு (யானே உலகெலாம் ஆயினேன்) கூறிக் கொள்கின்றனர் என்ற செய்திகள் உள்ளனவே என்பதற்கு மெய்கண்டார் விளக்கம் தருகின்றார்.

ஆன்மா எப்பொழுதும் அவ்வாறு நிற்பதில்லை. எனினும் சிவோகம் பாவனை கைவரப்பெற்றுச் சிவமாக நிற்கின்ற பொழுது அவ்வாறு கூறிக்கொள்வதாக - வாமதேவ முனிவர் முதலியோரைப் பற்றி - நூல்களில் செய்திகள் இடம் பெற்றுள்ளன. அங்கும் சிவம் அவ்வாறு நின்றது எனக் கொள்ளுதல் வேண்டுமேயன்றி அம்முனிவர்கள் அவ்வாறு நின்றார்கள் என்று கொள்ளுதல் பொருந்தாது என்பது மெய்கண்டார் தரும் விளக்கம்.

மூவகைச் சம்பந்தமும் உடம்பாடு உதாரணம் உடம்பாடில்லை

சங்கரர் கூறும் அபேத வாதமும், மத்துவர் கூறும் பேதவாதமும், இராமானுஜர் கூறும் பேதாபேதவாதமும் சித்தாந்த சைவத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆனால் அவர்கள் கூறும் உவமைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. வேறு உவமைகள் கூறப்பட்டுள்ளன என்பது அறியத்தக்கது.

1.சங்கரர் '**பொற்பணிபோல்**' என்றார். மெய்கண்டார் '**உடலுயிர் போல்**' என்றார். (சங்கரர் கூறிய உவமை அவர் கொள்கைக்கே விரோதமாகும் என்பது தனியே விளக்கத்தக்கது. இவ்வுதாரணம்(பொற்பணி போல்) பரிணாமம் கூறுபவர்க்கே பொருந்தும். விவர்த்தனம் கூறுபவர்க்கும் பொருந்தாது.

2.மத்துவர் "**இருட்டும் வெளிச்சமும் போல்**" என்றார். மெய்கண்டார் "**அகரமும் ஏனை உயிரும் போல்**" என்றார். இதற்கு வேறு ஓர் உவமை உண்டு. அது "**கண்ணும் சூரியனும் போல**" என்பது. இவ்வுவமையினை மெய்கண்டாரின் மாணாக்கர்களுள் ஒருவராகிய திருவதிகை மனவாசகம் கடந்தார் "**நின்று அருக்கன் கண்ணுக்குக் காட்டுமாப்போல உனதறிவில் நண்ணி அறிவித்திடுவோம் நாம்**" (உண்மை விளக்கம் செய்.28) என்று கூறியுள்ளார். உமாபதி சிவமும் இவ்வுவமையைக் கூறியுள்ளார். அது பின்னர் எடுத்துக் காட்டப்படும்.

3.இராமானுஜர் "**சொற்பொருள் போல்**" என்றார். மெய்கண்டார் **கண்ணொளியும் ஆன்மா போதமும் போல்** என்றார். இதனை மெய்கண்டார் தமது சிவஞான போதம் பதினோராஞ் சூத்திரத்தில் "*காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்*" என்று கூறி வைத்துள்ளார். இதுவே உடனாதலுக்கு - பேதாபேதத்துச் - சிறந்த உவமை என்று சிவஞான முனிவர் மாபாடியத்தில் எழுதியுள்ளார்.

அத்துவிதமும் தத்துவமசியும்

இங்ஙனம் மெய்கண்டார் கூறிய அத்துவித விளக்கமே, தத்துவமசி மகாவாக்கியப் பொருளுக்குப் பொருந்தி வருகின்றது. அத்துவிதம் என்பதற்கு இங்ஙனம் பொருள் கூறாவிட்டால் மகாவாக்கியம் பயனற்றதாகிவிடும் என்பது மாதவச் சிவஞான முனிவர் கருத்து. அவர்கள் எழுதியுள்ளன வருமாறு:

"அது நீ ஆகின்றாய் எனவும் ஆது ஆனேன் எனவும், அது இது ஆகின்றது எனவும் பொருள்படும் தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களின் பொருளே, ஈண்டு எடுத்து ஓதினார் ஆகலின்...." (சூ 2அதி. 1 மேற்கோள் வாக்கியத்தின் பாடியம்)

"ஒன்று எனப்பொருள் கொள்ளின் மகாவாக்கிப் பொருள் பயப்பதொரு விசேடம் இன்மையின் அத்துவிதம் என்றது பற்றி ஆண்டு ஒரு பயன்படாமையானும்...." (சூ6 அதி.2 சிவசமவாத மறுப்பு)

"அது நீ ஆகின்றாய் எனவும், அது நான் ஆகின்றேன் எனவும் அது இது ஆகின்றது எனவும் மூவிடம் பற்றி நிகழும் தத்துவமசி முதலிய வாக்கியங்களைக் கேட்டவழி, அது என்பது ஒருபொருள் நீ என்பது ஒரு பொருள் ஆகலின் ஒரு பொருள் மற்றொரு பொருளாமாறு யாங்ஙனம் என்னும் ஐயம் நீக்குதற்கு எழுந்ததாகலின் அது இதுவாவதற்கு ஏதுவாய் அவ்விரண்டிற்கும் உளதாகிய சம்பந்த விசேடம் உணர்த்துதலே "அத்துவிதம்" என்னும் சொற்குப் பொருள் என்று உணர்ந்து கொள்க." (சூ6 அதி.2 மேலதன் தொடர்ச்சி)

சிவஞான முனிவர் தரும் விளக்கம்

இந்த அத்துவிதம் என்பதன் பொருளைப் பற்றிச் சிவஞானமா பாடியத்தில் சிவஞான முனிவர் எழுதியுள்ளன

இங்கு குறிப்பிடத்தக்கன. அவை வருமாறு:

துவிதம் என்பது இரண்டு என்னும் பொருட்டு "அ" என்னும் "நகரம்" அப்பிரகாசம் என வருமொழிப் பொருளின் இன்மையினையும் அதன்மம் என வருமொழிப் பொருளின் மறுதலையினையும் அப்பிரமாணன் என வருமொழிப் பொருளின் அன்மையினையும் உணர்த்தி நிற்கும். அவற்றுள், ஈண்டு இன்மைப் பொருள் பற்றி இரண்டில்லை எனப் பொருள் கொள்ளின் இரண்டின்மை ஒன்றின் கண்ணேயாம். ஆகலின் ஒன்றெனப் பொருள்படும்.

மறுதலைப் பொருள் பற்றி இரண்டற்கு மறுதலையாகிய ஒன்றெனப் பொருள் கொள்ளின் மறுதலை இருபொருட் கண்ணதாலின் அதன் மறுதலையாகிய இரண்டாவதுண்மையும் பெறப்படும். படவே இரண்டு, ஒன்று என்பது பதிப்பொருள் ஒன்று என்னும் கருத்து எனப் பொருள்படும்.

அன்மைப் பொருள் பற்றி இரண்டல்ல எனப் பொருள் கொள்ளின் இரு பொருள்களும் வேறன்றி உடனாய் நிற்கும் எனப் பொருள்படும்.

இம்மூன்றனுள் இன்மைப் பொருள் சிறந்தமையின் அது பற்றி ஒன்று எனல் பொருத்தம் உடைத்து எனின், தானே தன்னை ஒன்றெனக் கருதல் வேண்டாமையின், அங்ஙனம் கருதும்

பொருள் வேறொன்று உண்டு என்பது பெறப்படும். ஆகலானும், எண்ணுப் பெயர்மேல் வந்த நகரம் அன்மைப் பொருள் மாத்திரையே உணர்த்திப் பொதுமையின் நிற்பதன்றி, ஏனைச் சொற்களின் மேல் வந்த நகரம் போல் இன்மை மறுதலைப் பொருள்களையும் உணர்த்துதல் வழக்கின்கண் இன்மையின், அத்துவிதம் என்ற மொழிதானே பிறிது காரணம் வேண்டாது வேறன்மையை உணர்த்தி நிற்கும்.... (சிவஞான போதம் சூ. 2 அதி. 1 ஏதுப் பொருளின் பாடியம்)

இன்னும் இதன் விளக்கமாக சிவஞானபோதம் ஆறாஞ்சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில்,

ஆன்மா சிவனோடு அத்துவிதமாய் நிற்குமாறு எங்ஙனம் என எடுத்துக் கொண்டு விரிவாக எழுதியுள்ள விளக்கமும் இங்கு அறியத்தக்கது.

இன்னும் பதினோராஞ் சூத்திரத்தில் ''காணும் கண்ணுக்கு காட்டும் உளம் போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்'' என்பதற்கு விளக்கம் எழுதும் வகையில் ''இஃது என் சொல்லியவாறோ எனின்'' என்று எடுத்துக் கொண்டு எழுதிய பாடியமும் இங்கு அறியத்தக்கது.

பாம்பன் சுவாமிகள் தரும் விளக்கம்

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தமது திருப்பா என்னும் நூலின் உரையில், ஒன்றும் இரண்டும் அல்லாத சம்பந்தப் பொருளில் உறும் அத்துவிதத்திற்குப் ''பதமாகிய'' சோறு (அரிசியும் அல்லாதது, குழை கூழும் அல்லாதது) உவமானமாகும் என எழுதினார். (திருப்பா - திவ்வியசுப்பிரமணியம் - 7)

மேலும், தமது "பரிபூரணானந்த போதம்" என்னும் நூல் உரையில் தமிழ் வீரசோழியம், வடமொழிப் பாணினீயம் ஆகிய இலக்கண நூல்களில் அத்துவிதம் என்னும் சொல்லுக்குக் கூறப்பட்ட இலக்கணவிதியினையும் அச்சொல் உணர்த்தும் எதிர்மறைப் பொருள்களின் வகைகளையும் நன்கு விளக்கி எழுதி, அன்மைப் பொருளே சைவ சித்தாந்தத்தில் கொள்ளப்படுவ தாயிற்று - எனவும் - ஏகம் எண்ணுப் பெயர்மேல் நகரம் வந்த சொல்லே அநேகம், அந்நகரமும் அத்திறப் பொருள் (இன்மைப் பொருள்) பயக்க வேண்டும். பயந்தக்கால் ஏகம் எனும் ஒன்று இல்லை, அஃதாவது யாது மில்லாச் சூனியம் என ஆகும். அவ்வாறாகாமே வடநூல் முடிபின்படி இரண்டின் மேற்பட்ட மூன்று முதலாகப் பல என ஆதலின் துவிதம் என்னும் எண்ணுப் பெயர் மேல் வந்த நகரமும் இன்மைப் பொருள் பயவாமே அன்மைப் பொருளையே பயக்கும் என்னும் மரபுறு தீர்வை மரபுதீர்வை ஏற்படும் என்க - எனவும்

அத்துவிதம் என்னும் ஒரு சொல்லும் (அலி, வாயில், நடு, சோறு, மாலை(பொழுது) என்னும் சொற்களைப் போல) ஏகமுமன்று, துவிதமுமன்று எனத் தீர்வை செய்யும் வலியுற்றுச் சம்பந்தம் உணர்த்தி நிற்பதாகும் - எனவும் முடிவு கூறினார் (பதி, பசு, பாச யதார்த்த விளக்கப் படலம் செய். - 99)

சுத்த அத்வைதம் - பெயர் விளக்கம்

"இவ்வத்துவிதம் ஏனையோர் கூறும் அத்துவிதம் போல் கேவலம் என்றாதல், விசிட்டம் என்றாதல், மறுதலை என்றாதல் யாதானும் ஒன்றான் விசேடிக்கப்பட்டுப் பொருள் உணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருள் உணர்த்துதலின் சுத்தாத்துவிதம் என வழங்கப்படும். ஈண்டுச் சுத்தம் என்றது யாதானும் ஒன்றான் விசேடிக்கப்படாது நிற்றல்" (சூ 6 அதி. 2 சிவசமவாத மறுப்பு) என்று மெய்கண்டார் கூறும் அத்துவிதத்திற்குப் பெயரும் விளக்கமும் எழுதினார் மாதவச் சிவஞானமுனிவர்.

இம்மெய்கண்டார் மரபில் வந்தவரும் புறச்சந்தான குரவர்களில் நான்காவதாக - இறுதியாக - வைத்து எண்ணப்படுபவருமாகிய உமாபதிசிவம் தமது சிவப்பிரகாசத்தில் பிறர் கூறும் உவமைகளையும், சித்தாந்த சைவர் கூறும் உவமைகளையும் நிரல் நிரையாக நிறுத்திப் பிறர் கொள்கைகளை மறுத்துச் சித்தாந்தக் கொள்கைகளை நிலைநிறுத்தி அத்துவிதம் என்னும் சொல்லின் கருத்தினையும் விளக்கிப் பாடியுள்ளார். அதுவருமாறு :

1.பொற்பணிபோல் அபேதப் பிறப்பு இலதாய்

2.இருள்வெளி போல் பேதமும் இன்றி

3.சொற்பொருள் போல் பேதாபேதம் இன்றி

1.உடலுயிர் 2. கண் அருக்கன் 3. அறிவொளி போல் பிறிவரும் அத்துவிதம் (சிவப்பிரகாசம் பாயிரம் செய். 7) பணி - ஆபரணம், அருக்கன் - சூரியன் : அறிவு - ஆன்ம போதம் : ஒளி -கண்ணொளி

இதனை *1. பொற்பணி போல் அபேதமன்று, உடலுயில் போல் அபேதம். 2. இருள்வெளி போல் பேதமன்று, கண்அருக்கன் போல் பேதம், 3. சொற்பொருள் போல் பேதாபேதமன்று, அறிவொளிபோல் பேதாபேதம் என இயைத்துக் கொள்ளுதல் வேண்டும்.* இந்த அளவில் சிவஞான போதம் இரண்டாஞ் சூத்திரம் - முதல் அதிகரணத்தில் இடம்பெற்ற அத்துவித ஆராய்ச்சியை ஓரளவு நிறைவு செய்கிறேன்.

எழுதியவற்றில் என் முக்குணவசத்தால் குளறுபடி எங்கேனும் நேர்ந்திருக்கும். நற்குணம் உடைய சான்றோர்கள் திருத்திப் படித்துக் கொண்டு எனக்கும் தெரிவித்தல் வேண்டும் என்று பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

இந்த அத்துவிதப் பொருளாராய்ச்சியில் மெய்கண்ட மரபில் நின்று மாதவச் சிவஞான முனிவரைத் துணைக்கொண்டு எழுத வேண்டிய செய்திகள் இன்னும் பல உள்ளன. அவற்றையெல்லாம் இங்கு எழுதின் இது ஒரு தனி நூலாகிவிடும். எனினும் இதனைப் படிப்பவர்க்கு மாபாடியம் படித்தல் வேண்டும் என்ற ஆசையும், ஊக்கமும் உண்டாக வேண்டும் என்பதே என் ஆசையும் நோக்கமும் ஆகும்.

பொய்கண்டார் காணாப் புனிதம் எனும் அத்துவித
மெய்கண்ட நாதன் அருள் மேவும் நாள் எந்நாளோ?

(தாயுமானார் - எந்நாட்கண்ணி - குருமரபின் வணக்கம் - 4)

திருச்சிற்றம்பலம்

அத்துவிதம் பற்றிய பாடல்கள்

ஏகனும் ஆகி அநேகனும் ஆனவன்
நாதனும் ஆனான் என்று உந்திபற
நம்மையே ஆண்டான் என்று உந்திபற

திருவுந்தியார். 5

அதுஇது என்றும் அவன் நானே என்றும்
அது நீயே ஆகின்றாய் என்றும் - அது ஆனேன்
என்றும் தமை உணர்ந்தார் எல்லாம் இரண்டாக
ஒன்றாகச் சொல்லுவரோ உற்று.

திருக்களிற்றுப்படியார். 85

பண் இசை, வெம்பருதிமதி, திலதயிலம்,
தீஇரும்பு, பாணி உப்பு,
விண்அனிலம், உடல்உயிர், நீர்நிழல், உச்சிப்
பளிங்கு, பகல் விளக்குப், பால்நீர்,
கண்இரவி, உணர்வுஒளி, போல் பிறிவரிய
அத்துவிதக் கலவி காட்டித்
தண் அளி வைத்து எனை ஆண்ட துறைசை நமச்
சிவாய குரு சரணம் போற்றி.

மாதவச் சிவஞானமுனிவர்

பேரூர்ப்புராணம் - காலவன் வழிபடு படலம்
அருள்திரு. கச்சியப்ப முனிவர்

ஏகமே எனும் இருக்கு எனின் இருக்கின் உட்பொருள் கேள்
ஏகமே பதி பலஅல எனும் அது காண்டி
ஏகமே எனச் சுட்டுவான் ஒருவன் இங்கு உளன் அவ்
ஏகன்போல் அலன் இருள்மலத்தோடு உளன் இவனே.
(51)

மன்ற வேதம் அத்துவிதம் என்று உரைத்திடும் மரபால்
ஒன்றுஅலாலல் பொருள் இலை எனின் உணர்த்தும் தெளிதி
என்றும் வேறன்மை உணர்த்தும் இக்கிளவியே இதனால்
நின்ற ஆருயிர் பலவும் தானாய் நிற்கும் நிமலன். (52)

சொன்ன தத்துவ மசிஎனும் சுருதியின் மொழியும்
மன்னு காரணப் பதியுநான் எனவரும் பசுவும்
என்ன வேபொருள் இருமைகண்டு இயைந்து வேறின்மை
தன்னை நாட்டிய தல்லது தனிஎன்றது இன்றே (53)

ஈண்டு நாம்உரைத் திட்டதே பொருள் பொருள்ஏகம்
வேண்டி னார்உரைத் திட்டது வெற்றபொய் யாதல்
காண்டி ஞாதிரு ஞானம் ஞேயமும் கரைந்தன்றால்
நீண்ட வேதம் மற்று ஒன்றென நிகழ்த்துமோ அதுதான் (54)

உ

சிவமயம்

தத்துவமஸி

முன்னுரை

தத்துவமசி என்பது தத் + துவம் + அசி என்னும் மூன்று பதங்களால் ஆகியதொரு வாக்கியம். இதனை வேதாந்த மகாவாக்கியங்கள் நான்கனுள் (மற்ற மூன்று மகாவாக்கியங்கள் : அகம்பிரம்மாஸ்மி, அயம் ஆத்மாபிரம்மம், பிரக்ஞானம்பிரமம் என்பன) ஒன்று என்பர். வேதாந்திகள் பிரமம் என்ற ஒருபொருளே உள்ளது. அதுவே நீ - நீயே அது - என இதற்கு விளக்கம் கூறுவர். சைவசித்தாந்திகள் பதி, பசு, பாசம் எனப் பொருள்கள் மூன்று உள்ளன. இவற்றுள் பசு பாசத்தைவிட்டுப் பதியைச் சார்ந்து நிற்றலை இவ்வாக்கியம் உணர்த்துகிறது என விளக்கம் கூறுவர். இது பற்றி இந்தக்கட்டுரை சிறிது சிந்திக்கின்றது.

தத்துவமசி ஆராய்ச்சி :

வேதம், ஏகம் என்றும் அத்துவிதம் என்றும் கூறியதோடன்றித் தத்துவமசி என்றொரு மகாவாக்கியத்தையும் கூறியுள்ளது. அதுவே நீ என்பது அதன் பொருள். ஆதலின் பிரம்மம் என்ற ஒருபொருள் மட்டுமே உண்டு என்றுதான் கொள்ளுதல் வேண்டும்.

தத், துவம் :

தத்துவமசி என்னும் மகாவாக்கியம் ஏகான்ம வாதப் பொருளை உணர்த்தாது. இம்மகாவாக்கியத்தில் **தத் (அது - சிவம்)** என்பது ஒருபொருள். **துவம் (நீ - பசு - ஆன்மா)** என்பது ஒரு பொருள். ஆக இரண்டு பொருள்கள் உள்ளன என்பது பெறப்படுகின்றது. இது எவ்வாறு ஒருபொருள் மட்டுமே உள்ளது என்பதை உணர்த்தும்?

அசி :

இனி அசி என்பதற்கு இருக்கிறாய் என்பது பொருள். ஆனால் வழக்கத்தில் ஆனாய் என்றுதான் சொல்லுவார்கள். நீ என்பது அதுவாதல் எவ்வாறு? இந்நாள்வரையிலும் அதுவாகாமல் இருந்தாயா? அதுவாகாமல் இருந்ததற்குக் காரணம் என்ன? நீ அழிந்து அது ஆனாயா? நீ அழியாமலே அதுவானாயா? அழிந்து அது ஆனாய் என்றால் அழிந்த பின் ஆதுவாவது எவ்வாறு? அப்படி அழிந்தபின் அதனால் உனக்கு என்ன பயன்? நீ அழியாமலே அது ஆனாய் என்றால் இரண்டு பொருள்களும் உள்ளன என்பது பெறப்படுமே. இது எவ்வாறு ஏகான்ம வாதத்தை உணர்த்தும்? உணர்த்தாது. எனவே, அது என்பதும் நீ என்பதும் பிரிப்பின்றிக் கலந்து ஒன்றாய் இருக்கும் நிலைமையினை (அன்மைப் பொருளில்) உணர்த்தும் பொருளே தத்துவமசிக்கும் பொருள் என அறிதல் வேண்டும்.

இன்னும், ஆனாய் என்றதனால் ஆகாதிருந்த நிலை ஒன்று உண்டு என்பது பெறப்படும். அதுவே பெத்தநிலை. ஆனநிலை சுத்தம். எனவே தத்துவமசி என்னும் மகாவாக்கியத்தால் பெத்தம், சுத்தம் என இரு நிலைகள் உள்ளன என்பதும் பெறப்படும்.

ஆகாதிருந்ததற்குக் காரணம் ஒன்று இருத்தல் வேண்டும். அதுவே ஆணவ மலம். ஆணவ மலம் தேய்ந்தால் நீ அது ஆவாய். ஆணவ மலம் தேயும் நிலையை அடைவதற்குக் காரணம் கன்மமலம், மாயாமலம் என்பன. இவற்றை இயக்குவது திரோதானம் எனப்படும் சத்தி. திரோதான சத்தியினால் மலம் தேயும் நிலையினை அடைந்த பின், ஆன்மாவுக்கு உண்மை ஞானம் உணர்த்தப்படும். மலம் தேயும் நிலையினை அடைந்த உடனேயே ஆன்மாவுக்கு உண்மை ஞானம் வந்துவிடாது. உண்மை ஞானத்தினை உணர்த்தினால் உணர்த்தியவாறே உணர்ந்து கொள்ளும் பக்குவ முதிர்ச்சிதான் உண்டாகும். அப்பொழுது உண்மை ஞானத்தை உணர்த்துபவர் குரு. திருவருள் சத்தியே குருவாக வந்து உண்மைஞானத்தை உணர்த்தும்.

உண்மை ஞானத்தை உணர்த்திய திருவருள், அவ்வான்மாவைச் சிவத்தில் சேர்த்திச் சிவானந்த அனுபவம் பெறச் செய்யும். இந்த நிலையில்தான் ஆன்மா பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் பெற்றுச் சிவமாக இருக்கும்.

இவை எல்லாம் அசி என்னும் பதத்தால் உணரப்படும். இதுவே முப்பதப் பொருள். இதைத் தத்பதம், த்வம்பதம், அசிபதம் என மூன்றாக்க் கூறுவர்.

தத்துவ மசி - சிவய :

இப்பொருளே சிவாகமங்களில் சிவய என்னும் முத்தி பஞ்சாக்கரத்தால் உணர்த்தப்படுவது. சி - சிவம், இது தத் பதப் பொருள். வ - அருள், இது அசி பதப்பொருள். ய - ஆன்மா, இது த்வம் பதப் பொருள். இது சிவாகமங்களில் கூறப்படும் முப்பதப் பொருள். இதனைச் சித்தாந்த மகாவாக்கியம் என்பர். சித்தாந்தம் என்பது சிவாகமங்களுக்குப் பெயர். துவம் ஆகிய ஆன்மா, தத்பதமாகிய சிவமாக ஆகவிடாமல் மலத்தால் தடை செய்யப்பட்டிருந்தது. த்வம் பதப் பொருளாகிய ஆன்மாவுக்கு, அத்தடையை நீக்கி ஞானத்தை நல்கித் தத்பதப் பொருளாகிய சிவமாக ஆக்கியது அசிபதப் பொருளாகிய திருவருள் என்பது சித்தாந்த மகாவாக்கியத்தின் கருத்து.

எனவே வேதாந்த (உபநிடத) மகாவாக்கியத்துக்கும் சித்தாந்த மகாவாக்கியத்துக்கும் வேற்றுமையில்லை. இது இங்ஙனம் இருக்கவும் வேதாந்த மகாவாக்கியம் ஏகான்ம வாதிகள் கூறுவது சித்தாந்த சைவத்துக்கு ஏலாதது.

வேதாந்த மகா வாக்கியம் சோகம்பாவனை (ச+அகம் = சோகம் - அவனே நான்) கூறுகிறது. சித்தாந்த மகாவாக்கியம் சிவோகம் பாவனை (சிவ + அகம் = சிவோகம் - சிவனே நான்) கூறுகிறது. இரண்டற்கும் இதுவே ஒற்றுமை. அவன் என்பதும் சிவன் என்பதும் ஒன்றே.

இதனையே மெய்கண்ட நூல்களுள் ஒன்றாக இடம் பெற்றுள்ள **திருக்களிற்றுப்படியார்** என்னும் நூலும்

அது இது என்றும் அவன் நானே என்றும்
அது நீயே ஆகின்றாய் என்றும் - அது ஆனேன்
என்றும் தமை உணர்ந்தார் எல்லாம் இரண்டாக
ஒன்றாகச் சொல்லுவரோ உற்று (பா 85)

என்று கூறியுள்ளது. **மகாவாக்கியம், பொருள் ஒன்றென்றும் (ஏகம்) கூறாது, இரண்டென்றும் (துவிதம்) கூறாது, அத்துவிதம் - இரண்டும் பிரிப்பில்லாத கலப்பு** - எனக் கூறும் என்பது கருத்து.

சிவயநம எனப் பஞ்சாக்கரம் ஐந்தெழுத்தாக இருந்தாலும் ந, வ இரண்டும் ஒன்றே, ந - திரோதானசத்தி. வ - திருவருள் சத்தி. ம, யவ்வில் கலந்து ஒன்றாய் நின்று பெத்தத்தில் தொழிற்பட்டும் முத்தியில் தொழில் மடங்கியும் நிற்கும் ஆதலின் அது தனியே எண்ணத் தக்கதன்று. வ பெத்தத்தில் நகரமாய்த் தொழிற்பட்டும் சுத்தத்தில் வகரமாய்த் தொழிற்பட்டும் சிவானுபவத்தில் ஆன்மாவுக்கு அனுபவம் நிகழ்வதற்கு உதவியாய்த் தொழிற்பட்டுச் சிவத்துடன் நிற்பது. சி ஆன்மாவுக்கு ஆனந்தத்தை வழங்கும் ய ஆனந்தத்தைப் பெற்று அனுபவிக்கும். வ - அதனை நிலையாகப் பெற்று அனுபவிக்கச் செய்யும். இவ்வாறு சிவானுபவத்தில் இம்மூன்றும் நிகழும் என்பதை

வா சி அருளி யவ்வை வாழ்விக்கும் மற்று அதுவே
ஆசில் உருவமுமாம் ஆங்கு

என்னும் **திருவருட்பயனாலும் (88)** அறியலாம்.

சித்தாந்த மகாவாக்கியப் பொருளாகிய இந்த முப்பதப் பொருளே சனகாதி நால்வர்க்கும், சிவாகமங்களை உரைத்தபின்னர் இறைவனால் உணர்த்தப்பட்டது.

மோனம் - அனுபவம்

இங்ஙனம் முப்பதப் பொருளைக் கேட்ட பின்னரும் அந்நால்வர்க்கும் மனம் ஒடுங்கவில்லை. ஆதலின் அவர்கள் புந்தியது ஒடுங்கும் ஞான போதகம் போதி என வேண்டினர்.

இதுவரையிலும் சிவம் இவர்களுக்குச் சொல்லால் ஞானம் போதித்தது. நூல்களின் துணையால் ஞானம் போதித்தது. இவர்களுக்கு இனி அனுபவமாகும்படி தாமே இருந்து காட்டுவோம் என நினைத்து, ஞானபோதம் சொல்லால் சொல்லிக் காட்டப்படுவதன்று என்று கூறி யான் இருப்பது போல் இருங்கள் என்று மார்பில் ஒரு கையினை வைத்து மோன முத்திரையைக் காட்டி அசைவின்றி யோகத்தில் (நிட்டை) இருப்பவர் போல் இருந்தான். இதுவே இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி எனப்பட்டது.

இங்ஙனம் சிவம் இருந்து காட்டியபடியே அந்நால்வரும் ஞானபோதம் சொல்லால் கேட்டறியப் படுவதன்று, மோனத்தில் இருந்து அனுபவிக்கத் தக்கது என்று தாமும் அவ்வாறே இருந்து மனம் ஒடுங்கி அசைவற்றிருந்து ஆனந்த அனுபவத்தில் திளைத்தனர்.

இச்செய்தி கந்தபுராணத்தில் மேருப்படலம் செய். 10 - 16 மற்றும் 60 - 65, மோனம் நீங்குப் படலம் செய். 30 - 35 ஆகியவற்றில் உணர்த்தப்பட்டது.

ஆக, சிவம் சனகாதியர்க்கு முதலில் வேதத்தை உணர்த்தியது. பின்னர் சிவ ஆகமத்தை உணர்த்தியது. பின்னர் முப்பதப் பொருளை உணர்த்தியது. பின்னர் மோனமாக இருந்துகாட்டியது என்பது இப்புராணத்தால் விளங்குகின்றது.

ஞானம் வேறு, மோனம் வேறு. ஞானம் நூல்களின் வழியாகவும் கேட்டலின் வழியாகவும் முப்பொருள்களின் இயல்பையும் ஆன்மா மலத்தின் நீங்கிச் சிவத்தைச் சேர்வதற்குரிய சாதனத்தையும்

சேர்ந்து பெறும் பயனையும் உணர்வது. இது சின் முத்திரையால் உணர்த்தப்படுவது. மோனம் என்பது ஞானத்தின் மேல் எல்லை. அந்தப் பயனை அசைவற இருந்து அனுபவிப்பது. இங்கு மோனம் என்பது ஞான வரம்பு என்னும் நீதி நூலும் (கொன்றை வேந்தன்) மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத் தானந்தமான இடத்தே தங்கியிடும் ஆனந்தம் மொண்டு அருந்த என்னும் உண்மை விளக்கமும் நினைக்கத்தக்கன.

சிவஞான முனிவர் கூறுவன

இங்கு மாபாடியத்தில் சிவஞானமுனிவர் எழுதியுள்ள கருத்துக்கள் சில குறிப்பிடத்தக்கன. அவை வருமாறு:

> அத்துவிதம் என்ற சொற்குப் பொருள் ஒன்றெனக் கோடல் பொருந்தாது. என்னை? ஒன்றென்பது பொருளாயின் ஒன்றெனவே விளங்கக் கூறல் அமையும். அவ்வாறன்றி அத்துவிதம் என உய்த்துணர வைத்து ஓத வேண்டாமையானும் ஒன்றெனப் பொருள் கொள்ளின் மகாவாக்கியப் பொருள் பயப்பதொரு விசேடம் இன்மையின் அத்துவிதம் என்றது பற்றி ஆண்டு ஒரு பயன்படாமையானும் என்க.
>
> மற்று என்னையோ அத்துவிதம் என்னும் சொற்குப் பொருள் எனின், சித்தாந்த சைவர் உரைக்குமாறு காட்டுதும்,
>
> 1. அது நீ ஆகிறாய் (தத்துவமசி) (முன்னிலை) எனவும்
> 2. அது நான் ஆகின்றேன் (அகம் பிரம்மாஸ்மி) (தன்மை) எனவும்
> 3. அது இது (அயம் ஆத்மா பிரம்மம்) (படர்க்கை) எனவும்

மூவிடம் பற்றி நிகழும் தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களைக் கேட்ட வழி, அது என்பது ஒருபொருள். நீ என்பது ஒரு பொருள் ஆகலின் ஒரு பொருள் மற்றொரு பொருளாகுமாறு யாங்ஙனம் என்னும் ஐயம் நீக்குதற்கு எழுந்ததாகலின், அது ஈதுவாவதற்கு ஏதுவாய் அவ்விரண்டற்கும் உளதாகிய சம்பந்த விசேடம் உணர்த்துதலே அத்துவிதம் என்னும் சொற்குப் பொருள் என்று உணர்த்து கொள்க (சூ. 6, அதி.2)

இவ்வத்துவிதம், அபேத சம்பந்தமாகிய ஐக்கியமுமன்றிப் பேதாபேத சம்பந்தமாகிய தாதான்மியமுமன்றிப் பேத சம்பந்தமாகிய சையோகமுமன்றிக் கலப்பும் உடனாதலும் வேறாதலுமாகிய மூன்றும் தன்கண் தோன்ற நிற்றல் பற்றி அம் மூன்றற்கும் பொதுவாகக் கூறப்படுமாகலான் (சூ,6 அதி.2)

இம்மூன்றியையும் தன்கண் தோன்ற இவற்றிற்கு வேறாய் நிற்கும் அத்துவிதத்திற்குச் சிறந்தெடுத்துக் காட்டப்படும் உவமையாவது, ஆன்ம போதமும் கண்ணொளியும் தம்முள் அத்துவிதமாய் நிற்றலாம் என்க. காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டலின் (சூ 11) எனவும் காட்டக் கண்டிடும் தன்மை உடைய கண்ணுக்கு ஏயும் உயிர் காட்டிக் கண்டிடுமாபோல் ஈசன் உயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன் எனவும் (சித்தியார் சுபக்கம்) அறிவொளிபோல் பிறிவரும் அத்துவிதமாகும் (சிவப்பிரகாசம் பாயிரம் 07) எனவும் மூன்று நூலாசிரியரும்

சித்தாந்த முடிவு உணர்த்தும் வழி இதனையே எடுத்துக்காட்டியவாறு அறிக. (சூ. 6, அதி. 2)

விந்துத் தானமாகிய புருவ நடுவில் சிகார யகார வகாரங்கள் முறையே தத்பதப் பொருளும் துவம்பதப் பொருளும் அசிபதப் பொருளும் ஆம் முறைமையின் அவ்வஞ்செழுத்தால் (சியவ) சிவோகம் பாவனை செய்யின் அப்பொழுதே அங்ஙனம் விளங்கித் தோன்றும் முதல்வனுக்குச் சேட சேடிய பாவத்தால் ஆகற்பாலதாகிய அடிமையாம் என்க. (சூ.9, அதி.3, அஞ்செழுத்தால் உள்ளம் என்னும் வெண்பாவின் பாடியம்).

பாம்பன் சுவாமிகள் கூறுவன

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தத்துவமசி என்னும் மகாவாக்கியத்தின் சுருக்கம் சோகம், அது சிவோகம் என்பதில் ஒன்றுபட்டு நிற்கும் என்கிறார்.

தத்துவமசி, பிரக்ஞானம்பிரமம், அயமாத்மாபிரமம், அகம்பிரம்மாஸ்மி என்னும் மகாவாக்கியங்கள் நான்கும் ஒன்றை ஒன்று தொடர்ந்து நிற்கும். இருதிற ஆன்மாக்களின் வியாப்பிய வியாபக அனன்னியத்துவமே இம்மகாவாக்கியங்களின் பொருள். இது சித்தாந்த விரோதமாவதன்று.

மந்திர ராஜமாகிய பஞ்சாக்கரத்தில் சிவய என்னும் எழுத்துக்களுள் சிவ என்னும் எழுத்து இரண்டும் அருளொடும் கூடிய சிவனை உணர்த்தி நிற்பன. ய என்னும் எழுத்து சீவான்மாவை உணர்த்தி நிற்கும். இச்சீவன் அஹம் என்னும் சொல்லால் குறிக்கப்படும். சிவனே நான் என்னும் பாவனை சிவோஹம் பாவனை எனப்படும்.

சோஹம் என்னும் உபநிடத வாக்கியமும் சிவோஹம் என்னும் ஆகம வாக்கியமும் பொருளால் வேறுபாடு உடையன அல்ல. இரண்டும் ஓங்காரத்தில் ஒன்றுபட்டு நிற்கும் எனக் கூறியிருப்பதும் இங்கு அறியத்தக்கது. மேலும் விளக்கம் பரிபூரணானந்த போதம் பதிபசு பாச யதார்த்த விளக்கப்படலம் செய் 109 இன் உரையில் காணலாம்.

முடிவுரை

இதுவரை கூறியவற்றால் தத்துவமசி மகாவாக்கியம் முப்பொருள் உண்மையை உணர்த்துவது என்பதும் அது சைவசித்தாந்தத்தில் சிவய எனும் முத்திபஞ்சாக்கரத்தில் வைத்து கூறப்படும் என்பதும் இரண்டும் வேறுவேறல்ல, ஒன்றே என்பதும் ஒருவாறு விளங்கும்.



திருச்சிற்றம்பலம்



சிவஞானபோதம்

அவையே தானேயாய்

அவையே தானே ஆய் இருவினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்குமன்றே.

சூத்திரத்தின் கருத்து

இச்சூத்திரம் பிரபஞ்சத்திற்குப் புனர் உற்பவம் வருமாறு உணர்த்துகிறது.

பிரபஞ்சம் - உலகம், புனர் உற்பவம் - சங்காரத்தின் பின் மீளத் தோன்றுதல். அறிவுடைய ஆன்மா, அறிவில்லாத உலகம் என்னும் இரண்டுமே பிரபஞ்சம் எனக் குறிப்பிடப்படும். இவை முறையே சேதனப் பிரபஞ்சம் என்றும் அசேதனப் பிரபஞ்சம் என்றும் கூறப்படும். சங்காரத்தின் போது மாயையில் ஒடுங்கிய உலகம் மீண்டும் தத்துவ தாத்துவிகங்களாய் - தனுகரண புவன போகங்களாய்த் தோன்றும். சங்காரத்தின் போது தூல தேகத்தின் நீங்கிய ஆன்மா, மீண்டும் வேறொரு தூலதேகம் பெறும். இவையிரண்டும் மீளத் தோன்றுதல் என்னும் சொல்லால் கூறப்படும். **இச்சூத்திரம் பெரும்பாலும் ஆன்மா ஒரு தூல தேகத்தினை விட்டு வேறொரு தூலதேகத்தைப் பெறுதல் பற்றியே கூறுகிறது.**

சூத்திரத்தின் பொருட் சிறப்பு

முதற் சூத்திரத்தில் அவன், அவள், அது என்னும் அவயவப் பகுப்பு உடைய உலகத் தொகுதி தோன்றல், நிற்றல், அழிதல் என்னும் முத்தொழிலுட்படுவதாக இருக்கிறது. ஆன்மாவுக்குக் கன்மமலம் பக்குவப்படுவதற்காக மீளத் தோன்றுதல் நிகழ்கின்றது. தோன்றிய உலகம் மீண்டும் ஒடுக்கம் வரும் வரையிலும் நிற்றல் நிகழ்கின்றது என்பன கூறப்பட்டன. ஒடுக்கத்தைச் செய்பவன் சங்கார காரணன் எனப்படுகிறான். இவன் தனது சத்தியைத் தாரகமாக் கொண்டுள்ள மாயையில் இருந்து அசேதனப் பிரபஞ்சத்தைப் படைக்கிறான். இது காரியப் பிரபஞ்சம் எனப்படுகிறது. சங்காரகாலத்தில் அப்பிரபஞ்சத்தை அம்மாயையில் ஒடுக்குகின்றான். எது எப்பொருளில் யாரால் ஒடுங்கியதோ அது அப் பொருளிலிருந்து அவராலேயே மீளப் படைக்கப்படும். எனவே சங்கார காரணனே படைத்தலுக்கும் காரணனாகின்றான். இவன் இவ்விரண்டற்கும் காரணன். எனவே, ஏனைய நிற்றல் (காத்தல்), மறைத்தல், அருளல், ஆகியவற்றிக்கும் காரணன் என்பது பெறப்படும். எனவே, பலவகைப்பட்ட பிரபஞ்சம் முழுவதற்கும் இவனே மகா சங்கார காரணன் எனவும் முழுமுதற் கடவுள் எனவும் கூறப்படுகின்றான். இவனை அந்தம் எனவும் ஆதி எனவும் அம்முதற்சூத்திரம் கூறியது. அந்தம் - அந்தத்தைச் (சங்காரத்தைச்) செய்யும் கடவுள். ஆதி – முதற்கடவுள். அந்தமே ஆதி எனப்பொருள் கொள்ளுதல் வேண்டும்.

இங்ஙனம் முதற் சூத்திரத்தில் காரியங்களும் நிமித்தகாரணமும் கூறப்பட்டன. ஒரு காரியத்துக்கு வேண்டும் மூவகைக் (முதல், துணை, நிமித்தம்) காரணங்களுள் நிமித்த காரணம் கூறப்பட்டது. முதற் காரணமும் ஒரு வகையால் கூறப்பட்டது. எஞ்சியுள்ள துணைக் காரணம் இச் (இரண்டாஞ்) சூத்திரத்தில் கூறப்படுகிறது. இச்சூத்திரம், இறைவனுடைய சத்தி துணைக் காரணம். ஆன்மாக்கள் முன்னமே செய்து சேமித்து வைத்துள்ள நல்வினை, தீவினை என்னும் கர்மம் அச்சத்தியின் வழித்தாகிய துணைக் காரணம் எனக் கூறுகிறது. நிமித்த காரணனன் ஒருவனாகத்தான் - சேதனனாகத்தான் - இருத்தல் இயலும். பலர் குழுவாக இருந்து ஒரு காரியத்தைச் செய்தாலும் அப்பலரும் அக்குழுவுக்குத் தலைமையுடைய ஒருவன் ஏவல் வழி நின்றே செய்வர். ஆதலின் பரம நிமித்த காரணன் எனப்படுபவன் ஒருவானகத்தான் இருப்பான். முதற்காரணமும் ஒரு பொருளாகத்தான் இருக்கும். ஆனதால் துணைக்காரணம் ஒன்றுக்கு மேற்பட்டதாக இருக்கும். ஆதலின் சத்தி ஒரு துணைக் காரணம், கன்மம் அதன் வழித்தாகிய துணைக்காரணம் என இரண்டு துணைக் காரணங்கள் இச்சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளன.

இங்ஙனம் அந்தம் எனப்பட்ட முதற்கடவுளுக்குத் தனது சத்தி என்னும் துணைக்காரணத்தையும் ஆன்மாக்கள் செய்து வைத்துள்ள கன்மம் என்னும் துணைக்காரணத்தையும் கொண்டு அவ்வான்மாக்களுக்குப் பக்குவம் வரும் வரையிலும் தூல தேகத்தை மாறி மாறிக் கொடுத்து அவ்வான்மாக்களைப் பிறப்பு இறப்புகளில் செலுத்துதலும் பக்குவம் வரும் வரையிலும்

அவ்வான்மாக்களுக்கு உண்மை விளங்காமல் மறைத்தலும் சங்காரகாலம் வரையிலும் பிரபஞ்சத்தை நிலைபெறச் செய்தலும் இறுதியில் (சூக்கும தேகமும் நீங்குங் காலத்தில்) அவ்வான்மாக்களை முத்தியில் சேர்த்தலும் இலக்கணம் என்பதும் இச்சூத்திரத்தால் கூறப்பட்டுள்ளது

முதற் சூத்திரத்தில் மலத்தால் என்பதால் ஆணவ மலமும், ஒடுங்கி உளதாம் என்பதனால் மாயாமலமும் கூறப்பட்டன. இச்சூத்திரத்தில் இருவினையின் என்பதனால் கன்ம மலமும், போக்குவரவு என்பதனால் மாயேய மலமும், ஆணையின் என்பதனால் திரோதானமலமும் ஆக ஐவகைப் பாசமும் இவ்விரண்டு சூத்திரங்களால் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறப்பட்டன எனக் கொள்ளுதல் வேண்டும். இருவினை என்பது காரிய கன்மம் (கான்மியம்) ஆதலின் அதற்கு முதற்காரணமாகிய காரண (மூல) கன்மமும் இச்சூத்திரத்தால் பெறப்படும். இவ்வாறு இச்சூத்திரம் மிகவிரிந்த பொருளைத் தன்னகத்துச் சுருக்கமாக அடக்கி வைத்திருக்கிறது என இதன் பொருட்சிறப்பினை உணர்தல் வேண்டும்.

சூத்திரத்திற்கு உரை

முதற்சூத்திரத்தில் அந்தம் என எடுத்துக் கொள்ளப்பட்ட முதல்வன் ஆன்மாக்களுக்கு மாயை என்னும் முதற்காரணத்திலிருந்து உலகை மீளத் தோற்றுவிக்கும் போது அவ்வான்மாக்களில் அவையேயாக (ஆன்மாக்களேயாக) நிற்பான். அங்ஙனம் நின்றாலும் தன் தனித்தன்மையால் திரியாது தானேயாக நிற்பான். அவ்வான்மாக்கள் உடம்புளுடன் கூடிவினை செய்வதற்கும்

வினைப்பயனை அனுபவிப்பதற்கும் அவற்றுக்கு உடனாகவும் நிற்பான். தன்னுடைய ஆணை என்னும் சத்தியால் அவ்வான்மாக்களுக்கு வரும் வினைகாரணமாக அவ்வான்மாக்கள் இறத்தல் பிறத்தல்களை அடையுமாறு நிற்பான்.

இவற்றைச் செய்வதற்குத் துணைக் காரணமாக அமையும் தனது சக்தியுடன் பிரிப்பின்றி நிற்பன்.

சூத்திரத்தின் சொல் முடிபு : அந்தம் எனப்படும் முதற்கடவுள் என்பது எழுவாய். இது முதற் சூத்திரத்திலிருந்து வருவித்துக் கொள்ளப்பட்டது. ஆய், ஆய், ஆய், புரிய, நிற்கும் என்பது சொல் முடிபு. நிற்கும் என்பது செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்று. நிற்பான் என்பது பொருள். அன்றே என்பது அசை நிலை. அன்றே நிற்கும் என இயைத்து அநாதியே இவ்வாறு நிற்கும் எனவும் பொருள் உரைக்கலாம். புரிதல் என்பது எப்பொழுதும் மேற்கொள்ளுதல். அதாவது, ஒருமுறை பிறத்தல் இறத்தல் அன்று. வினைப்பயன் அனுபவிப்பதற்கேற்பப் பலமுறை பலவேறு தூல தேகங்களை எடுத்துப் பிறத்தலும் விட்டுப் போதலும் உடையதாதல்.

சூத்திரத்தின் கூறுகள்

இச்சூத்திரம் நான்கு கூறுகளாகக் கண்ணழித்தல் செய்யப்பட்டுள்ளது. கண்ணழித்தல் பொருள் முடியும் இடம் அறிந்து தொடர்களைப் பிரித்துக்காட்டுதல். ஒவ்வொரு கூறும் ஒவ்வோரதிகரணம் எனப்படும்.

நான்கு கூறுகளாவன :

1.அவையே தானேயாய்

2.ஆணையின் இருவினையின்

3.போக்குவரவு புரிய

4.நீக்கம் இன்றி நிற்கும் என்பன

சூத்திரம் என்பது ஒரு பொருளைக் கருதிவருதல் வேண்டும் என்பர். இச்சூத்திரத்தில் நான்கு பொருள்கள் இருக்கின்றனவே! எனின் இந்நான்கு கூறுகளும் ஒன்றொடொன்று தொடர்புடையனவாய் புனர் உற்பவம் வரும் முறைமை என்னும் ஒரு பொருள் பற்றியே வந்தனவாதலின் இச்சூத்திரம் ஒரு பொருள் பற்றியே வந்தது என்பதில் ஐயமில்லை.

கூறுகளின் பொருட் சிறப்பு

முதற்கூறு இறைவன் ஆன்மாக்களுடன் ஒன்றாதல் (அவையேயாதல்) வேறாதல் (தானேயாதல்) உடனாதல் (அவையே தானேயாதல்) என மூன்று நிலையும் தன்கண் தோன்றும் படியாக அத்துவித சம்பந்தம் உடையவனாக நிற்பன் எனக் கூறுகிறது. இதற்கேற்ப "அவையே தானேயாதல்" என்பதனை அவையேயாதல், தானேயாதல் என ஒருமுறையும் அவையே தானே யாதல் என ஒரு முறையுமாக இரண்டு முறை பொருள் செய்து கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் பொருள் கொள்ளுமாறு சூத்திரம் செய்யப்படுதல் உத்திவகைகளுள் ஒன்றாகிய 'இரட்டுற

மொழிதல் என்னும் உத்தி' என்பர். அக்கூறு வேதத்தில் 'அத்துவிதம்' எனவும் 'ஏகம்' எனவும் வரும் சொற்களின் பொருளாராய்ச்சிக்கு இடமாக இருப்பது.

இரண்டாங்கூறு வினையின் அநாதித் தன்மை. வகைகள், வினைப்பயன் ஆன்மாக்களுக்கு வரும் முறைமை எனக் கன்மம் பற்றிய விரிந்த ஆராய்ச்சிக்கு இடமாக உள்ளது.

மூன்றாங்கூறு, ஆன்மாக்கள் மாறிப் பிறத்தல், அங்ஙனம் மாறிப்பிறக்குங்கால் முன் உடம்பில் நிகழ்ந்தவற்றை அறியாமைக்குக் காரணம், சூக்கும உடம்பு நிற்கத் தூல உடம்பு மட்டும் நீங்குவதற்கும் நீங்குவதற்குக் கூறப்படும் உதாரணம் ஆகியவை பற்றி ஆராய்கின்றது.

நான்காங்கூறு, முதல்வனுக்கும் அவனுடைய சத்திக்கும் உள்ள சம்பந்தம், முதல்வனும் சத்தியும் தனித்தனி வேறுவேறு பொருள்களா? ஒரே பொருளா? சத்தி ஒன்றா? பலவா? என்பன பற்றி ஆராய்கின்றது.

ஒவ்வொரு கூறுக்கும் மெய்கண்ட தேவநாயனார் உரை செய்து. அவ்வுரையை மேற்கோளாக (பிரதிக்ஞை) நிறுத்தி, அதனை வலியுறுத்தும் காரணம் (ஏது) கூறி, அதனை விளக்கும் உதாரணம் (திருஷ்டாந்தம்) கூறித் தருக்க முறைப்படியே தமது கருத்தைத் தெளிவாக விளக்கிச் செல்கிறார்.

முதற்கூறு :

இது அத்துவித அதிகரணம். வேதத்தில் பிரம்மம் அத்துவிதம், ஏகம், பிரம்மம் இல்லையெனில் எப்பொருளும் இல்லை என்பன போல் வரும் சொற்களையும் தொடர்களையும் கொண்டு பிரம்மம் ஒன்றே உள்ள பொருள். ஏனையயாவும் இல்லாதபொருள். அவை உள்ளன போல் தோற்றமளிக்கின்றன என்கின்றனர் சிலர். இவர்கள் மாயாவதிகள், ஏகான்மவாதிகள் எனப்படுவர்.

மெய்கண்ட தேவநாயனாரோ, பிரம்மம் தானே தன்னைப் பிரம்மம் என்றும் தான் அத்துவிதம் என்றும் தான் ஏகம் என்றும் கூறிக்கொள்வதால் பிரம்மத்துக்குப் பயன் இல்லை. இங்ஙனம் அறிந்து கூறுவான் ஒருவன் உளன். அவனும் பிரம்மமும் அத்துவிதமாக உள்ளனர். ஆதலின் அத்துவிதம் என்ற சொல்லே அங்ஙனம் கூறுகின்றவன் ஒருவன் பிரம்மத்துக்கு வேறானவனாக இருந்தும் இரண்டென்று கூறப்படாமல் அத்துவிதம் என்று கூறுமாறு பிரம்மத்துடன் பிரிப்பின்றி உள்ளானன் என்பதை உணர்த்துகிறது என்கிறார்.

பிரம்மம் மட்டும் இருந்தால் ஏகம் என்று சொல்லிவிடலாம். அறிந்து சொல்பவன் ஒருவன் பிரம்மத்துக்கு வேறாகத் தனியே இருப்பானாயின் துவிதம் (பிரம்மம் ஒருபொருள், பிரம்மத்தை அறிந்து சொல்பவன் ஒரு பொருள் எனப்பொருள் இரண்டு) எனக் கூறிவிடலாம். பிரம்மத்துக்கு அந்நியமாக ஒருவன் இருந்தும் அவன் தனியே நில்லாமல் பிரம்மமும் அவனுமாக இயைந்து நிற்கின்றான். ஆதலின் அவன் பிரம்மத்துக்கு அந்நியமாக

இல்லை. அநந்நியமாக உள்ளான் என்பதை உணர்தல் வேண்டும் என்கிறார்.

இதனை விளக்கும் மெய்கண்ட தேவநாயனாரின் சொற்றொடர் மிகவும் அழகானது. அருமையானது. அத்தொடர் 'அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னின் ஏகம் என்று சுட்டுவது உண்மையின் அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு' என்பது. இதில் 'அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னின்' என்பது அத்துவிதம் என்பதற்கு ஒன்று என்று பொருள் கூறுபவர் கூற்றை அநுவதித்துக் கொண்டது. 'அத்துவிதம் என்று சுட்டுவது உண்மையின்' என்பது தம் கூற்றுக்குக் காரணம் கூறியது. 'அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்துமாயிட்டு' என்பது தமது முடிவு இன்னது எனக்கூறியதாகும். இவ்வாறு இத்தொடரை மூன்று கூறுகளாக அறுத்து விளக்கம் கூறிக் கொள்ளுதல் வேண்டும்.

அந்நிய நாத்தி – அந்நியம் இன்மை. பிரிப்பின்றி நிற்றல், ஒன்றாய் நிற்றல், அந்நிய மின்றி நிற்றல், அநந்நியமாய் நிற்றல், வேற்றுமையின்றி நிற்றல் என்பன அத்துவிதம் என்பதன் பொருள்.

அத்துவிதம் - சொற்பொருள்

ந+துவிதம். ந – எதிர்மறை. துவிதம் - இரண்டு. ந – என்னும் எதிர்மறை, தனக்கு முன்னால் மெய்யெழுத்து வந்தால் 'ந்' – கெட்டு, 'அ' மட்டும்

நிற்கும். "ந – துவிதம் - ந் அ – துவிதம் - (ந்) அ – துவிதம் - அத்துவிதம்" என வருதல் காண்க. (தனக்கு முன்னால் உயிரெழுத்து வந்தால் 'ந' என்பது முன்பின்னாக மாறி ந் அ , அ ந் எனவரும். அது பற்றி இங்கு எழுத வேண்டியதில்லை).

எதிர்மறைப்பொருள் - ந என்னும் எதிர்மறை இன்மை, அன்மை, மறுதலை என்னும் பொருளில் வரும். இன்மை எனப் பொருள் கொண்டவர் துவிதம் - இரண்டு - இல்லை. ஒன்றே உள்ளது. அது பிரம்மம். ஏனைய பொருள்கள் உள்ளன போல், தோன்றுகின்றன. அவை இல்லாதன என்கின்றனர்.

வேறு சிலர் பிரம்மமும் உள்ள பொருளே ஏனைய பொருள்களும் உள்ள பொருள்களே. ஏனைய பொருள்கள் (சித்தாகிய ஆன்மாவும் அசித்தாகிய பிரபஞ்சமும்) பிரம்மத்திற்கு விசேடணமாக உள்ளன. இவற்றால் விசேடிக்கப்பட்டு விசிஷ்டமாய் நிற்கின்ற பிரம்மம் ஒன்றே என்பது அத்துவிதம் என்பதற்குப் பொருள் என்கின்றனர். இவர்கள் கூறுவது, ஆன்மாவும் பிரபஞ்சமும் உள்ள பொருள்களே என்று அவைதால் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. எனினும் அத்துவிதம் என்பதற்கு ஒன்று என்று பொருள் உரைத்தல் ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று.

முன்னவர் கூறுவது நிர்விசேஷ (விசேஷம் இல்லாத – கேவலம் பிரம்மம் மட்டுமாய் - குணம், செயல் முதலிய விசேஷணம் இல்லாத) அத்துவிதம் எனப்படும். இவர்கள் கூறியது விஷேணத்தால் விசேஷிக்கப்பட்ட – விசிஷ்ட அத்துவிதம் எனப்படும்.

சிலர் ந என்பதற்கு மறுதலைப் பொருள் கொண்டு பிரம்மமும் உண்டு. ஆன்மாவும் பிரபஞ்சமும் உண்டு. இவை ஒன்றற்கொன்று மறுதலையாய் - விரோதம் உடையனவாய் இருக்கும் என்கின்றனர். இவர்கள் ஆன்மா என ஒன்று உண்டு எனக் கொண்டது ஏற்றுக் கொள்ளத் தக்கதே. எனினும் இவை ஒன்றற்கொன்று மறுதலையாய் இருக்கும் என்றது ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று. இவை ஒன்றற்கொன்று மறுதலையாய் இருக்குமாயின் எப்பொருளுக்கும் எப்பொருளாலும் பயனில்லை என்றாகும். இத்தகைய பொருள்கள் இருந்தும் இல்லாதன எனவே படும்.

சைவசித்தாந்திகள் அத்துவிதம் என்ற சொல்லை ஒன்று அல்லது இரண்டு என எண்ணிக்கை உணர்த்தும் சொல்லாகக் கொள்ளவில்லை. இரண்டு பொருள்களுக்குகிடையேயுள்ள சம்மபந்தம் உணர்த்தும் சொல்லாகக் கொண்டனர். இரண்டு பொருள்கள் கலப்பினால் ஒன்றெனக் கருதுமாறு தம்முள் இயைந்து நிற்றல் அத்துவிதம் என்பதும் இவர்களின் கொள்கை. இவர்கள் ந என்ற எதிர் மறைக்கு அன்மைப்பொருள் கொள்கின்றனர். இன்மை என்பதும் அன்மை என்பதும் இக்காலத்தில் உலக வழக்கில் ஒரே பொருளில் வழங்கப்படுகிறது. இது தவறு. இரண்டும் வேறுவேறு பொருள் உடையன. இன்மை என்பது குறிப்பிடப்பட்ட பொருள் இல்லை என்று மட்டுமே உணர்த்தும். அன்மை என்பது குறிப்பிடப்பட்டதன் வேறாகிய ஒரு பொருள் உண்டு என்னும் பொருளை உணர்த்தும். சிவம் சித்துப் பொருளாகிய ஆன்மாக்களோடு மட்டும் தன் வியாபகத்தால் அத்துவிதமாக நிற்பதன்று. அசித்துப் பொருளாகிய உலகத்தோடும் அத்துவிதமாக நிற்கும்.

எனினும் இங்ஙனம் அத்துவிதமாக நிற்பதால் பயன் கொள்வது ஆன்மாவே. ஆதலின் சிவத்துக்கும் ஆன்மாவுக்கும் உள்ள அத்துவித சம்பந்தமே ஞான நூல்களில் எடுத்துப் பேசப்படும். அத்துவிதம் என்ற சொல் இருபொருள்கள் ஒன்றாதல் (அவையேயாதல்) வேறாதல் (தானேயாதல்) உடனாதல் (அவையே தானேயாதல்) என்னும் மூன்று நிலையும் தன்கண் தோன்ற மூன்றிற்கும் பொதுவாய் நின்று சம்பந்தம் உணர்த்துவது என்பதே சைவ சிந்தாந்தங்களின் முடிவு. பொருளான் இரண்டாய் இருந்தாலும் ஓராற்றான் ஒன்று எனக் கருதப்படுமாறு இயைந்து நிற்றல் அத்தவித சம்பந்தம்.

மெய்கண்ட தேவநாயனார், சிவமும் உயிரும் ஒன்றாக நிற்பதற்கு உயிரும் உடம்பும் ஒன்றாக இயைந்து நிற்பதை உதாரணம் காட்டினார்.

பிரம்மப் பொருள் ஏகம் (ஒன்று) என்பதற்கும் பிரம்மப்பொருள் இல்லையெனில் எப்பொருளும் இல்லை என்பதற்கும் எழுத்துகளுள் அகரத்தையும் ஏனைய எழுத்துக்களையும் (ஏனை எழுத்துக்கள் என்பதில் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் கொள்ளப்படும்) உதாரணம் காட்டினார். அகரம் ஓர் எழுத்து. அது ஏனைய எழுத்துக்களுடன் அத்துவிதமாகக் கலந்து நின்று அவை இயங்குவதற்குத் துணை செய்கின்றது. எனினும் அவரம் தன் தன்மையில் திரிதல் இல்லை. இது வேறாதற்குக் காட்டிய உதாரணம் என அறிதல் வேண்டும். இது பற்றி அகரம் இல்லை எனில் ஏனை எழுத்துக்கள் இல்லை எனக் கூறினால் அத்தொடருக்கு எவ்வாறு பொருள்

கொள்ளுகிறோமோ அவ்வாறே பிரம்மப்பொருள் இல்லையென்றால் எப்பொருளும் இல்லை என்னும் தொடருக்கும் பொருள் கொள்ளுதல் வேண்டும். அகரம் இல்லை என்றால் ஏனை எழுத்துக்கள் இல்லை என்பதற்கு ஏனை எழுத்துக்களே இல்லை. அகரம் மட்டுமே உள்ளது எனப் பொருள் கொள்வதில்லை. ஏனை எழுத்துகளுக்கு இயக்கம் இல்லை என்றே பொருள் கொள்ளப்படுகிறது. அது போல் பிரம்மப்பொருள் ஒன்று மட்டுமே உள்ளது என்று பொருள் கொள்ளுதல் தவறு. பிரம்மப் பொருள் இல்லை என்றால் ஏனைய பொருள்களுக்கு இருப்போ - இயக்கமோ இல்லை என்றே பொருள் கொள்ளுதல் வேண்டும். இங்கு **"மெய்யின் இயக்கம் அகர மொடு சிவணும்"** என்னும் தொல்காப்பியச் சூத்திரமும் (எழுத்ததிகாரம் - மொழி மரபு – 13) அதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய விளக்கவுரையும் படித்து அறியத்தக்கன. **"அகர முதல எழுத்தெல்லாம், ஆதிபகவன் முதற்றே உலகு"** என்னும் திருக்குறளும் (பாயிரம் - கடவுள் வாழ்த்து – 1) நினைக்கத் தக்கது.

மேலும், மெய்கண்ட தேவநாயனார் இறைவன் எல்லாப் பொருள்களோடும் தன் வியாபகத் தன்மையினால் அவையேயாக நிற்றலான், 'பிரம்மப் பொருள். அத்துவிதம்' எனக் கூறியது என்று விளக்கம் தந்து அதற்குப் பண்ணும் ஓசையும் போல், பழமும் சுவையும் போல் என்று உவமையும் கூறினார். இது உடனாதலுக்கு உவமை. இங்கு நினைவில் கொள்ள வேண்டியதொன்று உண்டு. இவ்வுவமைகள் குண குணிகளின் இயைபு. இது தாதான்மிய சம்பந்தம் எனப்படும். ஆதலின் வியாபகத்துக்கு மட்டுமே இவ்வுவமைகளைக்

கொள்ளுதல் வேண்டும். இரண்டு பொருள்கள் இயைந்து ஒரு பொருள் போல் நிற்றலுக்கு இதனைக் கொள்ளுதல் வேண்டா.

மேலும் மெய்கண்ட தேவநாயனார் ஒன்றாதலுக்கு ஓர் உதாரணம், வேறாதலுக்கு ஓர் உதாரணம், உடனாதலுக்கு ஓர் உதாரணம் எனத் தனி தனி உதாரணம் காட்டியதோடமையாது மூன்று நிலைமையும் விளங்கும் படியாகவும் ஓர் உதாரணம் காட்டினார். அது அரக்கும் கற்பொடியும் சேர்த்து அமைத்த கல். இதனைச் சிலர் சாணைக்கல் என்பர். சிலர் பொன் உரைகல் என்பர். அரக்கை உருக்கிக் கற்பொடியைச் சேர்த்து அமைக்கப்பட்ட இக்கல்லில் கற்பொடி தனியே தெரியாது. அரக்கை விட்டுப் பிரியாது. எனினும் அரக்கும் உண்டு. கற்பொடியும் உண்டு.

இந்தச் சூத்திரத்தில் இந்த அதிகரணத்தில் மாதவச் சிவஞான முனிவர் அத்துவிதம் என்பதற்கு எழுதிய விளக்கமும் ஆறாஞ் சூத்திரம் பாடியத்தில் சிவசமவாத உரை மறுப்பில் எழுதிய அத்துவித விளக்கமும் சைவ சித்தாந்தத்திற்கு மிகவும் இன்றியமையாதன.

இரண்டாங்கூறு

இது, இருவினை அதிகரணம் எனப்படும். முதல்வன் ஆன்மாக்களுக்கு தனு கரண புவன போகங்களைப் படைத்துக் கொடுக்கும் போது தான் வேண்டியவாறு படைத்துக் கொடுக்கமாட்டான். அவ்வவ்வான்மாக்கள் அனுபவிக்கத் தக்க வினைப் பயன்களுக்குத் தக்கவாறு படைத்துக் கொடுப்பான். அவ்விருவினை இறைவனது ஆணை என்னும் சத்தியால் செலுத்தப்பட்டு ஆன்மாக்களுக்கு

இன்பத் துன்பங்களைத் தரும். ஆணை, இருவினை என இரண்டு ஏன்? இருவினையே தரலாம். அல்லது ஆணையே தரலாம் எனின், இருவினை சடம், அது தன்னைச் செய்தவனை அறிந்து தானே தன்பயனைத் தராது. ஆன்மாவோ சுதந்திரமற்றது. சிற்றறிவுடையது. அதுவும் தான் செய்த வினையின் பயனைத் தானே அறிந்துஎடுத்து அனுபவியாது. ஆதலின் இறைவனது ஆணையே இருவினையின் பயனை அவ்வவ்வான்மாக்களுக்கு அறிந்து தருதல் வேண்டும். ஆணையும் ஏதாவதொரு காரணம் பற்றியே இன்பத்துன்பங்களைத் தரும். தன் இச்சைப்படி எதையும் தராது. ஆதலின் இரண்டும் வேண்டும். இதனை மெய்கண்ட நாயனார் அரசன், ஆணை, அதனைச் செயல்படுத்தும் அதிகாரிகள் என்னும் வகையால் விளக்கினார். இறைவன் தனது சத்தியை இருவினைகளில் வைத்து ஆன்மாக்களுக்கு வினைப்பயனைத் தருவான் என்கிறார்.

இவ்வினை சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மூவகைப்படும். முன்பே ஆன்மாக்களால் செய்து சேமித்து வைக்கப்படடது சஞ்சிதவினை. இது பிராரத்தமாய் வந்து இன்பத் துன்பங்களைத் தோற்றுவிக்கும். இவ்வின்பத் துன்பங்களை ஆன்மா, உடலோடு பொருந்தி அனுபவிக்கும். அனுபவிக்கும் பொழுது அனுபவிப்பதற்காக வினை செய்யும். வினை செய்யாமல் வினைப்பயனை அனுபவித்தல் இயலாது. இங்ஙனம் செய்யும் வினை ஆகாமியம் எனப்படும்.

இங்ஙனம் ஆன்மா செய்யும் வினையளவை அறிந்து இறைவன் ஆன்மாக்களுக்குப் பயன்விளையச் செய்வான். இது உழவன் செய்யும் முயற்சிகளை நிலம் ஏற்றுக் கொண்டு அம்முயற்சிக்குத் தக்க பலனைக் கொடுப்பது போன்றது. நிலம் - இறைவன், ஆன்மா – உழவன், ஆன்மா செய்யும் வினை – உழவன் செய்யும் முயற்சி. வினையின் பயன் - உழவன் செய்த முயற்சிக்குத் தக்க விளைவு. நிலம் தன் விருப்பப்படி விளைவைத் தராது. உழவனும் தன் முயற்சிக்கு அதிகமான அல்லது குறைந்த பயனைப் பெறமாட்டான். முயற்சியின் அளவே பயன் தராவிட்டால் வேறு யாராலும் (வினையாலோ, ஆன்மாவாலோ) பயன் விளைத்துக் கொள்ளுதல் இயலாது. எனவே ஆன்மாக்களுக்கு இன்பத் துன்பங்கள் விளைவதும் இறைவன் ஆன்மாக்களுக்குச் செய்யும் உபகாரம் என்றே கருதப்படும்.

ஆணவ மலமும் மாயா மலமும் அநாதியே உள்ளன. அதுபோல் கன்ம மலமும் புதிதாக வருவதன்று. அநாதியே உள்ள முதற்காரணமாகிய கன்மத்திலிருந்து காரிய கன்மமாக வருகின்றது என அறிதல் வேண்டும். காரிய கன்மம் புதிது புதிதாய் வருவது. காரண கன்மம் அநாதியாய் உள்ளது. இங்கு மாதவச் சிவஞான முனிவர் காரண (மூல) கன்மம் என ஒன்று இருத்தல் வேண்டும் எனச் சிற்றுரையிலும் பாடியத்திலும் நிறுவியுள்ளார். பாடியத்தில் **“வினையே செய்வது”** என்னும் தொடக்கத்தையுடைய தொல்காப்பியச் சூத்திரத்தை (சொல்லதிகாரம் - வேற்றுமை மயங்கியல் - 29) எடுத்துக் காட்டி நிறுவியுள்ளார்.

காந்தத்தையும் இரும்பையும் ஒருவன் நேராக எதிர் எதிராகப் பிடித்தால் காந்தம் இரும்பை இழுத்துக் கொள்கிறது. அதுபோல் இறைவன் வினைப் பயனையும் ஆன்மாவையும் நேர் எதிர் எதிராக இயைக்கிறான். ஆன்மா வினைப்பயனை அனுபவிக்கின்றது. சிற்றுரையிலும் பாடியத்திலும் மாதவச் சிவஞான முனிவர் வினையின் வகைகளையெல்லாம் மிக விரிவாக எழுதியுள்ளார். அவற்றையெல்லாம் இங்கு எடுத்து எழுதுதல் தக்கதன்று. விருப்பம் உடையோர் படித்து அறிந்துகொள்ளலாம்.

மூன்றாங்கூறு

இது, போக்குவரவு அதிகரணம் எனப்படும். போக்கு – போதல். வரவு – வருதல். ஆன்மா, தூல உடலை விட்டுச் சூக்கும உடலுடன் மற்றொரு தூல உடம்புக்குச் செல்லுதல் போக்குவரவு எனப்பட்டது. இறத்தல், பிறத்தல் என உலக வழக்கில் கூறப்படும். இவை இரண்டும் ஆன்மாவுக்குப் பக்குவம் வரும் வரையிலும் மாறி மாறித் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

ஆன்மா ஒருடம்பை விடுங்காலத்து முதலில் கண் முதலிய ஞானேந்திரியங்கள் செயலிழக்கும். பின் சூக்கும உடம்பு ஆன்மா அனுபவிப்பதற்கேற்ற பூதாசார தேகத்தையோ (சுவர்க்கத்திற்கு) யாதனா தேகத்தையோ (நரகத்திற்கு) பூதபரிணாம தேகத்தையோ (மீண்டும் பூமியில் பிறப்பதற்கு) தோற்றுவிக்கும். ஆன்மா அவ்வவ்வுடலிற் சென்று அவ்வவ்வினைப் பயனை அனுபவிக்கும். இங்ஙனம் நிகழும் பொழுது ஆன்மாவின் அறிவு, உடம்பு, இடம் ஆகியன வேறுபடுதலின் ஆன்மாவுக்கு முன்னைய உடம்பில்

நிகழ்ந்தவை நினைவுக்கு வராமல் மறத்தல் நிகழும். இது கனவு கண்டவன் நனவுக்கு வந்தபொழுது கனவு கண்டோமோ. கண்டிலோமோ என மயங்கி நிற்பதும் இன்னதை இன்னவாறு கண்டோம் எனத் தெளிவாக முழுமையாக அறிய இயலாதவனாய் நிற்பதும் போன்றது.

இங்ஙனம் ஆன்மா ஒருடம்பை விட்டுப் பிறிதொரு உடம்பில் செல்வதற்கு பாம்பு சட்டை உரித்துச் செல்வது போன்றது என்றும் ஆன்மா கனவில் தூல உடம்பை விட்டுச் சூக்கும உடம்பில் செல்வது போன்றது என்றும் யோகிகள் ஒருடம்பினை விட்டுப் பிறிதொருடம்பில் புகுவது (பரகாயப்பிரவேசம் பண்ணுவது) போன்றது என்றும் ஞான நூல்களில் உவமைகள் கூறப்படும்.

சிலர் குடத்தில் அகப்பட்டிருக்கும் ஆகாயம் குடம் உடைந்த பொழுது வெளியில் உள்ள மாகாகாயத்துடன் கலப்பது போன்றது என்பர். அது பொருந்தாது. இங்குப் பேசுவது தூல உடம்பை விட்டுக் கன்மப் பயனை அனுபவிப்பதன் நிமித்தம் பிறிதோருடம்பில் புகுவது மட்டும் தான். குடாகாய மாகாகாய உவமை, ஆன்மா சூக்கும உடம்பையும் விட்டு நீங்கிப் பரமுத்தியில் சிவத்தை சார்ந்து சிவானுபவத்தைப் பெறுவதற்குக் கூறப்படுவது என மேலே கூறப்பட்ட உவமைகளுக்கும் இவ்வுவமைக்கும் வேறுபாடு அறிதல் வேண்டும்.

இச்சூத்திரப் பாடியத்தில் மாதவச் சிவஞான முனிவர் ஆன்மாக்கள் வினைப்பயனை அனுபவிப்பதற்காகச் சென்ற வாழ்வதற்குரிய அண்டங்கள், புவனங்கள், உலகங்கள் ஆகியனபற்றி மிக விரிவாக எழுதியுள்ளனார்.

நான்காங்கூறு

இது, சக்தி அதிகரணம் அல்லது தாதான்மிய அதிகரணம் எனப்படும்.

இங்ஙனம் இறைவன் தனது ஆணை என்னும் சத்தியால் ஆன்மாக்களுக்கு வரும் இருவினைப் பயன்களை அவை அனுபவிப்பதற்காக அவற்றுடன் அவையேயாகவும் தானே யாகவும் அவையே தானாகவும் நின்று புணர் உற்பவம் செய்கிறானே அவ்விறைவன், தனது சத்தியுடன் எவ்வாறு நிற்கிறான்? சத்தியும் அவனும் வேறு வேறாகத் தனித்தனிப் பொருளாக நிற்கின்றார்களா? இறைவன் தன் சத்தியுடன் இயைந்து ஒரு பொருளாகவே நிற்கின்றானா? என்பது இவ்வதிகரணத்தில் ஆராயப்படுகின்றது.

மெய்கண்ட தேவநாயனார், இறைவன் தனது ஆணை என்னும் சித்சத்தியுடன் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பன் என்று கூறுகின்றார். ‘சமவேதம்’ என்பது வடமொழி, ‘ பிரிப்பின்றி, நீக்கமின்றி ’ என்பன இதன் தமிழ். ‘ சமவாயம்’ என்பதும் இதுவே.

இறைவன் வியாபகப் பொருள். அவன் எங்கும் உளன். அவன் ஒருபொருள் எனல் பொருந்தாது. இருபொருள் எனலும் பொருந்தாது. எந்த இடமும் எந்தப் பொருளும் அவனையின்றி அமைதல் இல்லை. ஆதலின் எல்லாப் பொருள்களுடனும் ஒன்றாதற்கும் வேறாதற்கும் பொதுவாகத் தன் வியாபகத் தன்மையால் பிரிப்பின்றி – நீக்கமின்றி – நிற்பான் என்றே கூறுதல் வேண்டும்.

பிரிப்பின்றி – நீக்கமின்றி – நிற்றல் என்பதும் அத்துவிதமே. எனினும் இறைவன் குணியும் சத்தி குணமுமாகப் பிரிப்பின்றி நிற்றலின் இது தாதான்மியம் எனப்படும். 'தாதான்மியம்' என்பதன் பொருள் 'அதுவாதல்' சிவமே சக்தி. சக்தியே சிவம்.

இறைவனும் அவனது சத்தியும் சூரியனும் அவனது ஒளியும் போல இயைந்து நிற்பர் சத்தி குணம். சத்தன் (சத்தியை உடையவன்) குணி, குண சமூகமே குணி. எனவே, குணி குணத்தை இன்றியமையாது. ஆதலின் குணியும் குணமும் பிரிப்பின்றி நிற்கும். சத்தியும் சிவமும் பிரிப்பின்றி நிற்கும். சத்தி – குணம். சிவம் - குணி.

பொருளான் இரண்டாக இருந்து இயைபான் ஒன்றெனக் கருதப்படுமாறு நின்றால் அத்துவிதம். பொருளால் ஒன்றாக இருந்து ஒருவகையால் இரண்டு எனக் கருதப்புடுமாறு நின்றால் தாதான்மியம். குணகுணிகளின் இயைபும் அவயவ அவயவிகளின் இயையும் தாதான்மியம்.

குணம் பொருள் எனக் கருதப்படுமா? எனின் ஒரு பொருளின் குணமாக நிற்பின் குணம் எனப்படும். அக்குணமே ஒரு தொழிலைச் செய்தது எனக் கூறுப்படுமாயின் அப்பொழுது அக்குணமும் பொருள் எனக் கருதப்படும்.

இத்தகைய சத்தி ஒன்றா? பலவா? எனின் சத்தி ஒன்று தானே சுடுதல், அடுதல் முதலிய தொழில் வேறுபாட்டால் சுடுஞ்சத்தி அடுஞ்சத்தி என்றற் றொடக்கத்துப் பல்வேறு வகைப்படுமாறு போல் சிவசத்தி ஒன்றே காரிய வேறுபாட்டால் பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை

என்று ஐவகைச் சத்திகளாவும்....... இன்னும் பலவேறு வகைப்பட்டும் நிற்கும்' எனச் சிற்றுரையிலும் பாடியத்திலும் உவமை காட்டி விளக்கியுள்ளார்.

இந்த இரண்டாஞ்சூத்திரம், பல வகையில் பெரியது. அதிகரணம் நான்கு. மூன்றாஞ் சூத்திரத்தில் ஏழு அதிகரணங்கள் இருந்தாலும் மேற்கோள் ஒன்று மட்டுமே. பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் நான்கு அதிகரணங்கள் இருந்தாலும் அதில் நான்காம் அதிகரணம் புறனடை. உதாரண வெண்பாக்கள் பத்து. சிவஞான போதத்துக்கு மாதவச் சிவஞான முனிவர் எழுதிய பாடிய்த்தில் மூன்றில் ஒரு பங்கு இச் சூத்திரப்பாடியாகமாக அமைந்துள்ளது. இச்சூத்திரப்பாடியத்தில்தான்,

1.ஆதி உற்பவம்,

2. ஐந்தொழில் விளக்கம்,

3. அத்து விதம் என்பதன் பொருளாராய்ச்சி,

4. ஒளியான திருமேனி, புறச்சம்யத்தவர்கிருளாய் என்னும் சிவப்பிரகாசத் திருவிருத்தங்களுக்கு உண்மைப் பொருள்,

5. மும்மல காரியம்,

6. கன்மத்தின் வகைகள்,

7. மூல கன்மம்,

8. பிரபஞ்ச முதற்காரண ஆராய்ச்சி,

9. தத்துவங்களின் முதற்காரண ஆராய்ச்சி

10. தாத்துவிகங்கள்,

11. காலம் பற்றிய ஆராய்ச்சி,

12. இருள்பற்றிய ஆராய்ச்சி,

13. குண குணிகள் பற்றிய ஆராய்ச்சி

14. அண்டங்களின் இயல்பு,

15. காரகசத்தி, ஞாபக சத்திகள் பற்றி ஆராய்ச்சி

ஆகியன இடம்பெற்றுள்ளன.

திருப்பெண்ணாகடம் - ஸ்ரீமெய்கண்டார் திருக்கோயில் கும்பாபிஷேக மலரில் வெளியிடும் வகையில் இவ்வரிய, பெரிய சூத்திரத்திற்கு விளக்கம் எழுதுக என ஆணையிட்டருளிய திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் இருபத்து நான்காவது குருமகா சந்திதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு அடியேனுடைய வணக்கத்தைத் தெரிவித்து இந்த விளக்கவுரையை இந்த அளவில் நிறைவு செய்கிறேன்.

ஈராண்டில் சிவஞானம் பெற்றுயர்ந்த மெய்கண்டார் இணைத்தாள் போற்றி.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

சித்தாந்த பண்டித பூஷணம்

முனைவர் ர.வையாபுரி எம்.ஏ., பிஎச்.டி.,

அவர்கள் உரை எழுதி தற்போது கிடைக்கும் நூல்கள் விபரம்

1. கச்சியப்ப முனிவரின் சைவ சித்தாந்தம் (பாகம் 1, 3)
2. அருள்திரு உமாபதி சிவம் அருளிய வினா வெண்பா
3. அருள்திரு உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்
4. அருள்திரு அருள்நந்தி சிவம் அருளிய இருபா இருபஃது
5. அருள்திரு உமாபதி சிவம் அருளிய கொடிக்கவி
6. திருச்சிவபுரம் பதிகங்கள் உரையும்,
   கோளறுபதிகம் விளக்கமும்
7. சைவ சித்தாந்த நோக்கில் அத்வைதம் - தத்துவமஸி ஒரு விளக்கம்

நூல் கிடைக்குமிடம்

சைவ சித்தாந்தசபை

9-B, முத்துசாமி சந்து, கைக்கோளன் தோட்டம்,
ஈரோடு-638 001. அலைபேசி : 94432 51731.